வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

ஈழநாடு

Eelanadu

23.02.2021 செவ்வாய்க்கிழமை




## நேற்று மட்டும் 490 பேருக்கு கொரோனா!

கொழும்பு,பெப்.23

இலங்கையில் நேற்று மட்டும் 490 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, இதுவரை தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 80 ஆயிரத்து 489 ஆக உயர்ந்துள்ளது. (அ-எ)

## உலகம் முழுவதும் சிறுபான்மை சமூகங்களின் மத அடையாளங்களை அழிக்கத் தீவிர முயற்சி!



### ஐ.நா. பொதுச் செயலாளர் குட்டரெஸ் கவலை

ஜெனிவா,பெப்.23

உலகம் முழுவதும் சிறுபான்மைச் சமூகங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், அவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையில் முதல்நாள் அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

02

# இலங்கையில் பொறுப்புக்கூறலை பிரிட்டன் தீர்மானம் வலியுறுத்தும்

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜெனிவாவில் அறிவிப்பு



ஜெனிவா,பெப்ரவரி 23

**நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானத்தை முன்வைப்போம் என பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டொமினிக் ராப் நேற்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆரம்ப நாள் அமர்வில் தெரிவித்தார்.**

அத்துடன், மியன்மார், பெலாரஸ், ரஷ்யா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளின் தற்போதைய மனித உரிமை நிலைகள் குறித்தும் அவர் உரையாற்றினார்.

அவர் அங்கு தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மனித உரிமைகளை மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் இங்கிலாந்து சர்வதேச முன்னுரிமைகள் பட்டியலில் வைக்கிறது. சர்வதேச சட்ட விதி மற்றும் உலகெங்கிலும் உள்ள மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை நாங்கள் தொடர்ந்து நிலைநிறுத்துவோம்.

மதம் மற்றும் நம்பிக்கையின் சுதந்திரத்தை

02

## உதவி கோரியது இலங்கை; மௌனம் காக்கும் இந்தியா

கொழும்பு, பெப். 23

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஆதரவு கோரிய இலங்கையின் கோரிக்கைக்கு இந்தியா இன்னும் முறையாகப் பதிலளிக்கவில்லை.

இலங்கையின் வெளியுறவு செயலாளர் ஜெயநாத் கொலம்பகே நேற்று ஒரு தனியார் தொலைக்காட்சி நிலையத்திடம், இலங்கை இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு

02

## யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர் உட்பட 4பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம்,பெப்.23

வடக்கு மாகாணத்தில் மேலும் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுத் திங்கட்கிழமை உறுதி செய்யப்பட்டது எனவும் இவர்களில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்

02

## 6 பொலிஸார் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியல் கைதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், மானிப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் ஆறு பேர் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் தனி மைப்படுத்தப்பட்டனர்.

02

## ஜெனிவாவில் இலங்கை ஒருபோதும் சரணடையாது

### வெளிவிவகார செயலர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.23

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள அமர்வில் இலங்கை போரிடாமல் சரணடையாது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இலங்கை தர்க்க ரீதியான உண்மைகளுடன் மனித உரிமைகள் பேரவையில் தனது கரிசனைகளை முன்வைக்கவுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர், தகவல்களில் உண்மைகள், சட்டத்தில் பிழைகள், பார்வையில் பிழைகள் காணப்படுவதாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

“இது முற்றிலும் ஒரு நாட்டின் உள்விவகாரம், நீங்கள் இதனை

02

## இந்தியாவின் அனுசரணையின்றி தமிழருக்கு தீர்வு சாத்தியமற்றது!

### ஜனநாயக போராளிகள் கட்சி கூறுகிறது

யாழ்ப்பாணம், பெப். 23

இந்தியாவின் அனுசரணையில்லாது ஈழத்தமிழர் பிரச்னைக்கான தீர்வு இலங்கைத் தீவில் சாத்தியமில்லை என ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அனுசரணையில்லாது ஈழத்தமிழர் பிரச்னைக்கான தீர்வு இலங்கைத்தீவில் சாத்தியமில்லை என ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர்

02

### ஓ.எல். பரீட்சை அடுத்த வாரம் ஆரம்பம்

## கொரோனா பாதித்த மாணவர்களுக்கு மாவட்டம் தோறும் இரு நிலையங்கள்

கொழும்பு, பெப். 23

கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒவ்வொரு மாவட்டங்களிலும் இரண்டு விசேட மத்திய நிலையங்களை நிறுவியுள்ளோம். கொழும்பில் அதன் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளோம். இது குறித்து சுகாதார அதிகாரிகள் மற்றும் அதிபர்களுடன் பேச்சு நடத்தி மாணவர்களின் சுகாதார விடயங்களை உறுதி செய்கின்றோம் என கல்வி

02

## பேராயருடன் கலந்தாலோசித்த பின்னரே ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை குறித்து முடிவு

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, பெப். 23

“பேராயருடன் கலந்தாலோசித்த பின்னரே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஆணைக்குழுவின் அறிக்கை பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும்“ என கல்வி அமைச்சர் ஜி.எல்பீரிஸ் தெரிவித்துள்ளார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உயிர்த்த ஞாயிறு தினத் தீவிரவாத தாக்குதல்

02

## இந்தியாவின்...

இ.கதிர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் **46** ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகி உள்ளது. இந்த நிலையில் கடந்த காலங்களில் ஐ.நாவினால் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் ஒரு பெரிய எதிர்பார்ப்போடு இருக்கின்றார்கள். இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நாவின் போர்க்குற்ற நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத் துக்கான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையோடு எமது மக்கள் எதிர்பார்ப்போடு இருக்கின் றார்கள்.

ஆனால், அவ்வாறான சூழல் தற்போது அமையவில்லை. ஐ.நாவின் நிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவது வரைவிலேயே இலங்கைக்கு எதிரான சில விடயங்கள் குறிப்பிடப்படவில்லை.

ஏனென்றால், தற் போதைய சூழ்நிலையில் எமது மக்களின் எதிர்பார்ப்பு என்பது இலங்கையை ஒரு குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று அங்கு சரியான முறையில் உண்மைகள் விசாரிக்கப்பட்டு எமது மக்களுக்கான நீதி கிடைக்கவேண் டும் என்பதுதான்.

சர்வதேச சமூகம் எமது மக்களுடைய நீதிக்காக செயற்பட வேண்டும். உண்மையிலேயே இதற்கு இந்தியாவின் ஒரு அங்கீகாரம்-இந்தியாவின் அனுசரணை தேவை. இந்தியாவின் அங்கீகாரம் எமக்கு கிடைக்குமாக இருந்தால் உலகமும் நமது பக்கம் திரும்பிப் பார்க்கும். அத்தோடு எமது மக்களுடைய நியாயமான பிரச்னைக்கு தீர்வு காண முன்வரும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

(அ)

## யாழ்...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று **423** பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் **5** பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வலைப்பாடு கிராமத்தில் மேலும் இரண்டு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்கள் இருவரும் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்புடையவர்கள்.

மன்னார் நகரைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உள்ளமையும் நேற்றைய பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. இவர் ஏற்கனவே, தொற்று உள்ளவர்களுடன் நேரத் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் **329** பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் எவருக்கும் தொற்று உறுதி செய்யப்படவில்லை- என்றார். (அ-எ)

## உலகம்....

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மனித நல்வாழ்வுக்கு பல்லுயிர் அடிப்படை என்பது போல, சமூகங்களின் பன்முகத்தன்மையும் மனிதகுலத்துக்கு அடிப்படை. அனைத்துச் சமூகங்களினதும் மத மற்றும் பாரம்பரிய ரீதியான தனித்துவ அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும், உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கும், ஏற்றவகையிலான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

இருப்பினும், சிறுபான்மை சமூகங்களின் கலாசார மற்றும் மத அடையாளத்தை அழிக்க முற்படும் செயல்பாடுகளை அவதானிக்க முடிகிறது.

சிறுபான்மை சமூகத்தின் கலாசாரம், மொழி அல்லது நம்பிக்கை தாக்குதலுக்கு உள்ளாகும் போதும் பாதுகாப்பு என்ற போர்வையில் அவர்களை சந்தேகத்துடன் நோக்கும்போதும் அனைவரும் அச்சுறுத்தப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கைகள் பெரும் பின்னடைவுக்கு வித்திடுவதாக சுட்டிக்காட்டிய ஐ.நா.செயலாளர், மனித உரிமைகள், மத, கலாசார மற்றும் தனித்துவமான மனித அடையாளத்தை முழுமையாக மதிக்கும் கொள்கைகளுக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும்-என்றார். (அ-எ)

## 6 பொலிஸார்...

அத்துடன், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர்கள் எவரும் நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லப்படவில்லை.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியல் கைதி ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து சந்தேகநபருடன் தொடர்புபட்ட 4 சிறைச்சாலை உத்தி யோகத்தர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையிலேயே, சந்தேகநபரை கடந்த **11**ஆம் திகதி நீதிமன்றுக்கு அழைத்துச் சென்ற மானிப்பாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த **6** பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதால் அவர் கைது செய்யப்படுவதற்கு முன் கொண்டிருந்த தொடர்புகள் தொடர்பில் கண்டறிவதில் சுகாதாரத் துறையினர் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

(அ-எ)

## உதவி.....

சிறப்பு கோரிக்கைக் கடிதத்தை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை இந்தியாவின் ஆதரவைக் கோரியது என்றும் அவர் கூறினார்.

இருப்பினும், இந்த கோரிக்கைக்கு இந்தியா இன்னும் முறையாக பதிலளிக்கவில்லை என்று கொலம்பகே குறிப்பிட்டார்.

அண்மைய நாட்களில் சில சம்பவங்கள் நடந்த போதிலும், இந்தியா சாதகமான பதிலை அளிக்கும் என்று இலங்கை நம்புகிறது என்று அவர் கூறினார்.

இலங்கையில் உள்ள நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒரு தீர்மானத்தை முன் வைக்க இலங்கை தொடர்பான குழு விரும்புகிறது.

ஆசிய நாடுகள் மற்றும் பிற நாடுகளின் தீர்மானத்துக்கு எதிராக இலங்கை ஆதரவு கோரி வருகிறது. இருப்பினும், அண்மைக்காலமாக பூகோள அரசியலில் ஏற்பட்டுள்ள விரிசல்கள் காரணமாகவும், சீனா பக்கம் இலங்கை சார்ந்து வருவதன் காரணமாக வும் இலங்கை, இந்திய உறவில் தற்போது விரிசல் விழத் தொடங்கியுள்ளது.

## இலங்கையில்...

வென்றெடுப்பது, ஊடக சுதந்திரத்தை பாதுகாத்தல், ஜனநாயகத்தை வென்றெடுத்தல் ஆகிய நோக்கங்களை நாங்கள் முன்னிறுத்து வோம். இவற்றை உறுதி செய்ய இராஜதந்திர வழியிலும் ஏனைய வழிகளிலும் உள்ள சந்தர்ப்பங்களை நாங்கள் பயன்படுத்துவோம்.

இலங்கையையும், சிரியாவையும் பிரிட்டன் அரசாங்கம் நிகழ்ச்சி நிரலில் வைத்திருக்கும். இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த கவனத்தை தொடர்ந்து தக்கவைப்பதற்காக புதிய தீர்மானத்தை சமர்ப்பிப்போம். மனித உரிமைகளை திட்டமிட்ட அடிப்படையில் மீறுபவர்களை பொறுப்புக்கூறச்செய்யும் வலுவான சர்வதேச அமைப்பை நாங்கள் விரும்புகின்றோம்.

இதேபோன்று, மியன்மார், பெலாரஸ், ரஷ்யா, சீனாவில் இடம்பெறும் மோசமான மனித உரிமைகள் மீறல் குறித்து அக்கறை கொண்டுள்ள சர்வதேச பங்காளிகள், ஐ.நா. வல்லுநர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் நாங்கள் இணைந்துகொள்கிறோம்.

ஐ.நா. பேரவை ஆணையாளர் அவர்களே, மனித உரிமைகளை மீறுபவர்களைக் கண்காணிக்கும் ஒரு பயனுள்ள சர்வதேச மனித உரிமை அமைப்பைக் காண நாங்கள் விரும்புகிறோம். மனித உரிமைகள் பேரவ அதன் பங்கை முழுமையாகச் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அல்லது அதன் நற்பெயர் மிகவும் பாதிக்கப்படுவதையே நாங்கள் காணமுடியும் என நான் அஞ்சுகிறேன். மனித உரிமைப் பேரவை தனது கடமைகளில் வெற்றி பெறவேண்டும் என்று இங்கிலாந்து விரும்புகிறது. அதற்கு சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து பிரிட்டன் தனது ஒத்துழைப்பை வழங்கும்-என்றார்.

## பேராயருடன்...

பற்றிய ஆணைக்குழு தொடர்பில் சமூகத்தில் இன்று கருத்தோட்டமொன்று உருவாகியுள்ளது. அந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டபோது பல்வேறு சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டன. முன்கூட்டியே தகவல்கள் கிடைத்திருந்தும் தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஆணைக்குழு முன் பலர் வாக்கு மூலம் அளித்திருந்தனர். இது ஒரு பிரிவு மாத்திரமே.

அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவினிடத்தில் மேலும் பலவற்றை எதிர்பார்த்தோம். இந்த தாக்குதலைத் தூண்டியோர், பணம் உதவி வழங்கியோர், அதற்கான உபகரணங்கள் பெற்றுக்கொண்ட விதம் குறித்து ஆராய்வதே நோக்கமாகவும் இருந்தது. இது குறித்து உண்மையை அறிந்துகொள்ளவும் பொறுப்பு கூற வேண்டியவர்களை சட்டத்திற்கு முன் கொண்டுவருதலும் மிகமுக்கியாகும்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மிகவும் பெறுமதிமிக்க கடமையொன்றை செய்தார். **250**ற்கும் மேற்பட்டோர் பலியாகி **500**ற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தபோது கர்தினால் தலையிட்டிருக்காவிட்டால் இந்த நாடு இரத்தக் குளத்தில்தான் மிதந்திருக்கும். கர்தினால் தலையீடு செய்து ஆத்திரமடைந்தவர்களின் உணர்வுகளை அடக்க முடிந்தது.

குறித்த ஆணைக்குழு தற்போது அறிக்கையை கையளித்துள்ளதுடன் அடுத்த கட்டம் என்ன என்பதே முக்கியமாகும். இதுகுறித்த அடுத்த கட்டத்தை கர்தினாலுடன் பேச்சு நடத்தியே எடுக்க வேண்டும். அவரது யோசனையும் அவசியம். இருந்த போதிலும் இந்தப் பேச்சுக்கு சர்வமதத் தலைவர்களையும் இணைத்துக்கொள்வது அவசியமாகும் - என்றார்.

(அ-எ)

## கொரோனா...

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த வாரம் நடைபெறவுள்ள சாதாரண தரப் பரீட்சைக்கு நாடு முழுவதிலும் **6,22,305** மாணவர்கள் தோற்றுகின்றனர். **4,513** பரீட்சை நிலையங்கள் உள்ளன. இணைப்பு மத்திய நிலையங்கள் **542** உள்ளன. **423,746** பேர் பாடசாலைகளில் இருந்தும், **198,606** பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் இதில் தோற்றவுள்ளனர்.

கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒவ்வொரு மாவட்டங்களிலும் இரண்டு விசேட மத்திய நிலையங்களை நிறுவியுள்ளோம். கொழும்பில் அதன் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளோம். இது குறித்து சுகாதார அதிகாரிகள் மற்றும் அதிபர்களுடன் பேச்சு நடத்தி மாணவர்களின் சுகாதார விடயங்களை உறுதி செய்கின்றோம்.

இதுதவிர. பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலமாக அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்திருக்கின்றோம். தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கிடைக்காதவர்கள் இணையத் தளத்திற்குச் சென்று அதனை பதிவிறக்கம் செய்யவும் முடியும். - என்றார்.

## ஜெனிவாவில்...

செய்துள்ளீர்கள் ஏன் இதனை செய்தீர்கள் எனத் தெரிவிப் பதற்கு இன்னொரு ஸ்தாபனத்துக்கு என்ன உரிமையுள்ளது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன் காரணமாகவே நாங்கள் இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கின்றோம்.

நாங்கள் போரிடாமல் சரணடைவதற்கு தயாரில்லை, நாங்கள் காணாமல் போனவர்களின் அலுவலகம் தொடர்ந்தும் இயங்குவதை விரும்புகின்றோம், இழப்பீடு தொடர்பான அலுவலகத்தை தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு விரும்புகின்றோம்" எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-எ)

## புதிய மொந்தையில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் தேசிய பேரவையென்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும் பின்னர், தமிழ் தேசிய கூட்டமைப் பாகவும் இணைப்புகள் ஏற்பட்டு தற்போது சிவில் சமூக அமைப்புகளோடு ஒன்றிணைந்த வகையில் தமிழ் தேசிய பேரவை என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இப்புதிய பேரவையின் முத லாவது கூட்டத்தில் கலந்துகொண்டிருக்க வில்லை.

தமிழ் தேசிய பேரவையின் உருவாக்கம் என்பது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதோடு, மனிதாபிமானப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு எவ்வளவு தூரம் மற்றும் எவ்வளவு காலம் ஒற்றுமையாக இருந்து குரல் கொடுக்குமென்பது சந்தேகமாகவே இருக்கின்றது.

ஏனெனில். தமிழ் மிதவாத அரசியல் வாதிகளோ அல்லது ஆயுதப்போராட்ட அமைப்புக்களோ ஒற்றுமையாக இருந்து எதனையும் ஆக்கபூர்வமாக ஒருபோதும் சாதிக்காமல் இருந்ததே வரலாறு.

இந்நிலையில், தமிழ் தேசியப்பேரவையென்பது தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதைவிட, அப்பேரவையில் அங்கம் பெறுகின்ற அரசியல் கட்சிகளின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதையே முக்கிய நோக்கமாக கொண்டுள்ளதென்றே கருத வேண்டியுள்ளது.

ஈழநாடு
Eelanadu
23.02.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, மாசி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# தமிழ்த் தேசிய பேரவை சாத்தியப்படுமா?

சில வருடங்களுக்கு முன்னர் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பின் தலைமையில் கூட்டமொன்று இடம்பெற்றிருந்தது. இதில், கூட்டமைப்பும் அப்போது கூட்டமைப்புக்கு எதிர்நிலையிலிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் பங்குகொண்டிருந்தன. கூட்டத்தின் முடிவில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கும் வகையில் தமிழ் தேசிய பேரவையொன்றை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது. ஆனால், அப்போது, தமிழ் மக்களின் ஏகத் தலைமையென்னும் தகுதி நிலையை தக்கவைத்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதில் நாட்டம் கொள்ளவில்லை. பின்னர் தமிழ்த் தேசியப் பேரவை தொடர்பான எண்ணக்கரு முளையிலேயே கருகிப்போனது.

சில வருடங்களின் பின்னர் மீண்டும் பேரவை புதியதொரு வடிவில் எட்டிப்பார்த்தது. கூட்டமைப்பின் அரசியல் அணுகுமுறைகளில் அதிருப்தியடைந்திருந்த பலர் - அவர்களில் அநேகர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் - ஒன்றிணைந்து, தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கினர். அதற்கு ஒரு கவர்ச்சிகரமான தலைமை தேவையென்னும் அடிப்படையில் சம்பந்தனுடன் முரண்பட்டுக் கொண்டிருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனை பேரவைக்குள் இழுத்தனர். அவரும் இணைத்தலைவரானார். ஆனாலும், பேரவையுடன் ஒத்துழைக்க கூட்டமைப்பு மறுத்திருந்தது. உண்மையில், பேரவையை ஒரு மக்கள் இயக்கமாக அல்லது அரசியல் கட்சிகள்மீது அழுத்தம் கொடுக்கவல்ல அமைப்பாக கட்டியெழுப்புவதற்கு மாறாக, அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்களின் பின்னால் செல்லும் அமைப்பாகவே அது வெளியில் தெரிந்தது. கூட்டமைப்பிற்கு மாற்றான கட்சிகள் கூட்டணியை உருவாக்க வேண்டுமென்று எண்ணியவர்கள் அனைவரும் பேரவையின் நிழலில் ஒதுங்கிக்கொண்டனர். இதன் விளைவாக, தமிழ் மக்கள் பேரவை என்பது பிறிதோர் அரசியல் கட்சிபோன்றே நோக்கப்பட்டது. இறுதியில் தமிழ் மக்கள் பேரவை செயலிழந்தது.

இவ்வாறான அனுபவங்களின் வழியாக நோக்கினால், இப்போது புதிதாக முளைகொள்ளும் இந்த எண்ணமும் செயல்வடிவம் பெறுவதில் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. பத்து கட்சிகள் இணைந்து தமிழ் தேசிய பேரவை ஒன்றை ஏற்படுத்தப்போவதாக கூறினாலும் கூட, பிரதான கட்சிகளான கூட்டமைப்போ அல்லது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளோ, அவ்வாறானதொரு முடிவில் உறுதியாக இல்லை. அதே வேளை, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு இதனை ஆதரிக்கப்போவதில்லை. உண்மையில், இங்குள்ள பிரச்னை அனைத்தும் தேர்தல் கண்ணோட்டத்திலேயே நோக்கப்படுகின்றது. தேர்தலில் தோல்வியடைந்தவர்களே அதிகம் முன்னுக்கு நிற்கின்றனர். இந்த நிலையில் ஏனையவர்கள் இதனை அங்கீகரிப்பதற்கான வாய்ப்பில்லை. உண்மையில், இவ்வாறான முயற்சிகளை அரசியல் கட்சிகள் சாராத அமைப்புக்கள் முன்னெடுக்க வேண்டும். அவர்கள் கட்சிகளை அழைக்க வேண்டும். ஆனால், இங்கு நடப்பதோ வேறு.

அதே வேளை ஒரு புறம் சிலர் ஒன்றுகூடி, இவ்வாறானதொரு முயற்சி தொடர்பில் உரையாடுகின்றபோது, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கான தனியான நிகழ்ச்சி நிரலுடன் இயங்கிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் எது தொடர்பிலும் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால், ஒன்று மட்டும் உண்மை. அனைத்து கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் மதத்தலைவர்களும் ஒரு புள்ளியில் பணியாற்றக்கூடிய, ஒரு பொதுத்தளம் தேவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், அதனை எவ்வாறு உருவாக்குதென்பதுதான் இங்குள்ள பிரச்னை.

# 'புதிய மொந்தையில் பழைய கள்': தமிழ் தேசிய பேரவை!

- அலசுவது **இராஜதந்திரி** -

*ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ளதன் பின்னணியில் தமிழ் தேசிய பேரவை என்ற புதிய அமைப்பை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் இணைத்து உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*தமிழ் தேசிய பேரவை என்ற அமைப்பு உருவாக்கப்படும் பட்சத்தில் அவ்வமைப்பு சகல தமிழ் கட்சிகளும் இணைந்த, மூன்றாவது ஓர் அமைப்பாகவே உதயமாகுமெனக் கருதமுடியும்.*

*தமிழர் விடுதலைக் கூட்டணியே தமிழ் அரசியல் அரங்கில் உருவான முதலாவது இணைப்பாக விளங்கியிருந்தது.*

*1972ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் இணைப்பில் தமிழர் கூட்டணி (பின்னர் தமிழர் விடுதலைக் (கூட்டணி) உருவாக்கப்பட்டிருந்தது.*

*ஆரம்பத்தில் அமரர் எஸ்.தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா.) கட்சியும் தமிழர் விடு தலைக்கூட்டணியில் சேர்வதற்கு முன்வந்தி ருந்தது.*

*ஆயினும், பின்னர் மலையக மக்களின் அரசியல், சமூக பிரச்னைகள் வேறானவை என்று கூறி, இ. தொ. கா வை தொண்டமான் தமிழர் விடுதலைக்கூட்டணியிலிருந்து விலக்கிக் கொண்டார்.*

**அபார வெற்றி**

*1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைப் பிரகடனமாக தனி நாட்டுக்கோரிக்கையை முன்னிறுத்தி 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் வடக்கு-கிழக்கில் அபார வெற்றி பெற்று அன்று பிரதான எதிர்க்கட்சியாகவும் பாராளுமன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணி இடம் பிடித்திருந்தது.*

*ஆனால், காலப்போக்கில் தமிழ் தீவரவாதம் விரிவடைய ஆரம்பித்ததை யடுத்து, தமிழர் விடுதலைக்கூட்டணி அரசியலில் தனது முக்கியத்துவத்தை இழக்க ஆரம்பித்ததோடு, நாளடைவில் அனல் பறந்த தமிழ் தீவரவாதத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் உட்பட பல முக்கிய அரசியல் பிரமுகர்கள் இரையாகவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டிருந்தது.*

*தமிழ் தீவரவாத அமைப்புகளான தமிழீழ விடுதலைப்புலிகளும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.), தமிழ் ஈழ விடுதலை கழகம் (ரெலோ) ஈரோஸ் அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஈழம் தேசிய விடுதலை முன்னணி (ஈ. என். எல். எவ்.) என்ற அமைப்பு இந்தியாவில் உருவாகியிருந்தது.*

**ஈழும் தேசிய விடுதலை முன்னணி**

*இந்த அமைப்பின் உருவாக்கம் வடக்கு - கிழக்கு மக்களிடையே தீவிரவாத அமைப்புகளின் ஒற்றுமை தொடர்பில் நிறையவே எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது.*



*ஆனால், ஈ.என். எல். எவ். ஆரம்பமான சொற்ப காலத்திலேயே பிளவுபட்டு விடுதலைப் புலிகள் அமைப்பு தன்னோடு கூட்டுச் சேர்ந்த ஏனைய அமைப்புகளின் தலைவர்களை தொலைத்துக்கட்டியதுடன், ஆயுத போராட்டத்தில் ஓர் ஏகபோக நிலையையும் கொண்டிருந்தது.*

*நலிவுற்ற நிலையில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியே நாளடைவில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு நோர்வேயின் அனுசரணையோடு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான பேச்சையடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கி விட்டிருந்ததோடு, விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளின் ஓரங்கமாக இருக்குமெனவும் இக்கூட்டமைப்பு எதிர்பார்க்கப்பட்டது.*

*தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வடக்கு-கிழக்கில் காணப்பட்ட அபாரமான அரசியல் செல்வாக்கு போன்றே தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் அமோக ஆதரவு கிடைத்திருந்தது.*

*2015ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஒரு புதிய அரசாங்கத்தை உருவாக்குவதோடு, பிரதான எதிர்க்கட்சியாக இரண்டாவது தடவையாகவும் தமிழ்அரசியல்தரப்பு பாராளுமன்றத்தில் இடம்பிடிப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் அபாரமான அரசியல் செல்வாக்கு வழியமைத்திருந்தது.*


**தமிழ் தேசிய கூட்டமைப்பில் பிளவு**

*ஆயினும், தமிழ் தேசிய கூட்டமைப்பில் கூட பிளவுகள் நாளடைவில் ஏற்பட்டு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து விலகியதோடு, தமிழ் தேசிய கூட்டமைப்பினால் வடமாகாண முதலமைச்சராக்கப்பட்ட சி. வி. விக்னேஸ்வரனும் தமிழ் மக்கள் கூட்டணி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சியை ஸ்தாபித்து, தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து விலகியிருந்தார்.*

*தற்சமயம் மீளவும் பத்து தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பொன்று*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

ஒருமுறைக்கு இருமுறை யோசித்து எதிலும் இறங்குவீர்கள். பிரச்னை கிளப்பும் நபர்களைச் சற்றுத் தள்ளியே வையுங்கள். மனதை குவித்து வெல்வீர்கள். பிள்ளைகளால் பெருமிதம் வரும்.

**இடபம்**

இன்று சிறு சிரமங்களை எதிர்த்து நின்று வெல்வீர்கள். பிரச்னையைக் கண்டு அஞ்சாமல் சாதிப்பீர்கள். கவலை தீரும். புதிய கலை ஒன்றை கற்பீர்கள். நிம்மதி கிடைக்கும்.

**மிதுனம்**

வயிறு தொடர்பான உடல் உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது. முயற்சி செய்த சில விஷயங்களில் தாமதம் ஏற்படலாம். மன நிறைவு வரும். அலைச்சலுக்கு பிறகு முயற்சி கைகூடும்.

**கடகம்**

தன்னம்பிக்கை குறையாமல் இருப்பது உங்கள் கையில்தான் உள்ளது. பிள்ளைகளிடம் கோபத்தைக் காட்டாமல் நிதானமாகப் பேசுங்கள். பணியிடத்தில் சிறந்து விளங்குவீர்கள். பாராட்டு பெறுவீர்கள்.

**சிம்மம்**

தன்னம்பிக்கை அதிகரிக்கும். சகோதரர்களின் சந்திப்பு நிகழும். ஆரோக்யம் பற்றிய பயம் அவசியமற்றது. மற்றவரை அனுசரிப்பீர்கள். முயற்சி எடுத்து உங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி**

பிறரை பற்றிய நல்ல விஷயங்களை வெளிப்படுத்துவீர்கள். புதிய நபர்களிடம் பேசும்போது கவனமாக இருப்பது நல்லது. பணியிடத்தில் எதிர்பார்த்த துறை மாற்றம் உண்டாகலாம்.

**துலாம்**

மகிழ்ச்சியான நாள். முன்பு செய்த தவறுக்கு வருந்துவீர்கள். கோயில் திருப்பணிகளுக்கு உங்கள் பங்களிப்பைச் செய்வீர்கள். நீண்டகாலம் ஏங்கியபடி அதிகாரியின் பரிவு கிடைக்கும்.

**விருட்சிகம்**

கலைத்துறையினருக்கு நன்மை உண்டு. பக்தி அதிகரிக்கும். வெற்றி, தோல்வி என மாறி மாறி சந்திக்க வேண்டிவரும். புதிய முயற்சியை இரண்டு நாள் தள்ளி வைப்பது நல்லது.

**தனுசு**

பிறரின் பிரச்னையில் தலையிடுவதைத் தவிர்ப்பீர்கள். தாழ்வு மனப்பான்மை உங்களை விட்டுப் போகும்படி வெற்றி வரும். ஆணவம் இல்லாமல் நடந்து கொள்ள முயற்சியுங்கள்.

**மகரம்**

உடல் உபாதை தீரும். மன வருத்தம் நீங்கும். செலவு குறையும். பிள்ளைகளின் நலன் அதிகரிக்கும். மனதில் இருந்த பயமான எதிர்பார்ப்பு நல்ல முறையில் முடியும்.

**கும்பம்**

பொறுப்பாக செயல்படுவீர்கள். புதிய விஷயம் ஆரம்பிக்கும். பணியிடத்தில் பிறரின் மனநிலையை உணர்ந்து செயல்படுவீர்கள். பணியாளர்கள் மேலதிகாரிகளின் பாராட்டு பெறுவீர்கள்.

**மீனம்**

எதிர்பாராத வகையில் உறவினர், நண்பர் வருகை உண்டு. அலுவலகத்தில் வெளிப்படையாகப் பேச வேண்டாம். மனதில் பலம் கூடும். ஆரோக்யம் பற்றிய பயம் தீரும்.

# பெரமுன கூட்டணிக்கு புத்துயிர் கொடுக்கவும்

## அரச பிரதானிகளிடம் பங்காளிகள் கோரிக்கை

கொழும்பு, பெப். 23

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்கு புத்துயிர் கொடுத்து அதனை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுப்பதற்கு ஆளுங் கூட்டணியிலுள்ள பங்காளிக்கட்சிகள் தீர்மானித்துள்ளன.**

அடுத்த தேர்தலுக்கு முன்னர் கூட்டணி கட்டியெழுப்பட்டு, ஓரணியில் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்ற யோசனையும் முன்வைக்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரச கூட்டணியில் அங்கம் வகிக்கும் 10 இற்கு மேற்பட்ட பங்காளிக் கட்சிகள், அண்மைக்காலமாக தொடர் சந்திப்புகளை நடத்தி வருகின்றன. முதல் இரு சந்திப்புகளும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவின் வதிவிடத்தில் நடைபெற்றது.

மூன்றாவது சந்திப்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போதே 'ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டமைப்பை' கட்டியெழுப்பவேண்டும் என்ற கோரிக்கையை ஆளுங் கட்சியின் பிரதானிகளிடம் முன்வைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலுக்கு முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன



தலைமையில் 'ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டமைப்பு' எனும் பெயரில் கூட்டணி உருவாக்கப்பட்டது. எனினும், தேர்தலின்பின்னர் கூட்டணியின் செயற்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன.

இந்நிலையில் மொட்டு கட்சியை (ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவை) மட்டும் பலப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலேயே, தனிவழி செல்லாவது, கூட்டணியை பலப்படுத்தவேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதற்கு பங்காளிகள் தீர்மானித்துள்ளன.

இதன்படி ஜனாதிபதி, பிரதமர் உட்பட மொட்டுக் கட்சியின் பிரமுகர்களை விரைவில் சந்தித்து இக்கோரிக்கையை முன்வைப்பார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஆளுங் கூட்டணிக்குள் அண்மைக்காலமாக கருத்து மோதல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேஸ்புக் களியாட்ட விருந்து; ஒரு பெண், 16 ஆண்கள் கைது

கொழும்பு, பெப். 23

ஹபரண பகுதியில் பேஸ்புக் மதுபான விருந்தில் ஈடுபட்ட 16 ஆண்களையும் பெண்ணையும் நேற்று ஹபரண பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன் தினம் இரவு ஹபரண நீர்த்தேக்கத்துக்கு அண்மையிலுள்ள விடுதியில் விருந்து நடைபெற்றது. அது நேற்று காலை வரை தொடர்ந்தது என்று ஹபரண பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகலைச் சேர்ந்த 29 வயதுடைய ஒரு பெண்ணும், 16 ஆண்களும் கைதாகினர். அவர்கள் 22 முதல் 28 வயதுக்குட்பட்டவர்கள்.

ஹபரண, கெக்கிராவ, திருகோணமலை, மாத்தறை மற்றும் குருநாகல் பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர்.

## சிறைச்சாலைகளில் அதிகரிக்கும் தொற்றாளர்களின் எண்ணிக்கை

கொழும்பு, பெப். 23

சிறைச்சாலைகளிலிருந்து மேலும் 28 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளிலிருந்து அடையாளம் காணப்பட்ட மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையானது 4,775 ஆக உயர்வடைந்துள்ளது.

எனினும் தற்சயம் அதிகாரிகள் மற்றும் கைதிகள் உள்ளடங்கலாக 127 பேர் மாத்திரமே கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், ஏனையவர்கள் பூரண குணமடைந்துள்ளனர்.

ஈழநாடு
Online
சம்பவங்கள், செய்திகள் உடனுக்குடன் அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

## சர்ச்சைக்குரிய கையுறைகளுடன் மூன்று பேர் கைது

கொழும்பு, பெப். 23

மத அடையாள ஓவியங்கள் வரையப்பட்ட 311 கையுறைகளுடன் கண்டி பூஜாபிட்டியாவில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பச்சை கையுறைகளில் இயேசு கிறிஸ்து, மரியன்னை, புத்தரின் உருவப்படங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற செயல்களின் மூலம் அமைதியின்மையை ஏற்படுத்துவது தண்டனைச் சட்டத்தின் விதிகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே மூவரும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொவிட் தடுப்பூசி குறித்து சிலரால் தவறான பிரசாரம்

கொழும்பு, பெப். 23

நாட்டில் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படுவது குறித்து சிலர் தவறான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர் என, பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்படாதெனத் தெரிவிக்கப்பட்டுவரும் கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை என அவர் கூறினார்.

அத்துடன், நாட்டில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ள அவர், இதனை விரும்பாத சிலர் போலி பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

# அரசில் அங்கஜன் உட்பட ஐந்து தமிழ் அடிமைகள்!

## சாடுகின்றார் கஜேந்திரன் எம்.பி.

வவுனியா, பெப். 23

**பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன், டக்ளஸ், திலீபன், வியாழேந்திரன், பிள்ளையான் ஆகியோர் அரசாங்கத்தின் முகவர்களாகவும் அடிமைகளாகவும் இருக்கிறார்கள் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.**




வவுனியாவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதி யாக இருக்கிறோம். இது எமது நீதிக்கான போராட்டம். இலங் கையில் இருக்கும் கட்டமைப் புகளால் தமிழர்களின் பிரச்னை களுக்கான நீதி கிடைக்காது என்பது நிரூபணமான வகை யிலேயே சர்வேதச குற்றவியல் நீதிமன்றை நோக்கி நாங்கள் செல்லவேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது.

அதில் நம்பிக்கை இல்லை என்று சொல்வதற்கு முன்பாக சரியான முயற்சிகளை செய்தி ருக்கிறோமா என்பதை நோக்க வேண்டும். அத்துடன் சர்வதே சத்தை நோக்கிச் செல்லும் போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நேர் மையாக செயற்படவேண்டும். கடந்த ஜனவரி மாதம் அனைத் துத் தரப்பாலும் ஒரு காத்திர மான செயற்பாடு முன்னெடுக் கப்பட்டது. அந்த விடயத்தை முற்றாக வெறிதாக்கும் வகை யில் சுமந்திரனதும் கூட்டமைப் பினதும் செயற்பாடுகள் இடம் பெற்றிருக்கின்றன.

தமிழ்க்கட்சிகளால் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப் பப்பட்ட கடிதத்தில் உள்ள விடயங்களுக்கு வலுச்சேர்க்கும் விதமாக பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி நடத்தப்பட்டது.

ஆனால் அது அப்படியல்ல என்று வடக்கு-கிழக்கில்உள்ள 18 பாராளுமன்ற உறுப்பினர்க ளில் 10 பேரைக் கொண்ட அணியின் பேச்சாளர் சொல்லி யிருக்கிறார் என்றால் அதற்கு மேல் உலகம் என்ன முடிவை எடுக்க முடியும்?.

ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன், டக்ளஸ், திலீபன், வியாழேந்தி ரன், பிள்ளையான் ஆகியோர் அரசாங்கத்தின் முகவர்களாக அடிமைகளாக இருக்கிறார்கள். இந்த நிலையில் கூட்டமைப்பு இவ்வாறான கருத்தைச் சொல்லி வந்தால் நாங்கள் உல கத்தை நம்பவேண்டாம் என்ற முடிவுக்கு எப்படி வர முடியும்.

இங்கு எங்களுடைய விரல் களே எமது கண்களை குத்தியி ருக்கின்றன. எனவே மக்கள் விழிப்படையவேண்டும். சரியான நிலைப்பாட்டில் சர்வதேச சமூ கத்தை நோக்கி செயற்பட்டால் இந்த பூகோளப் போட்டியை எங்களுக்கு சாதகமாக்கி கொள்ள முடியும். அதில் நம்பிக்கை இருக்கிறது -என்றார்.

# திருமலை துறைமுகமும் பறிபோகும் ஆபத்துநிலை

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 23

திருகோணமலை துறைமுக மும் இலங்கைக்கு இல்லாமல் போகும் ஆபத்து ஏற்பட்டுள்ள தாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற் சங்கங்கள் எச்சரித்துள்ளன.

திருகோணமலை எண்ணெய் களஞ்சியத் தொகுதியை நிர் மாணிப்பதற்காக முன்வைக்கப் பட்டுள்ள திட்டத்தின் ஊடாக இந்தியாவின் நகர்வுகளால் இந்த ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தா பனத்தின் தொழிற்சங்க கூட்ட மைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித,பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விஜேசிங்க கூறுவது என்ன? திருகோணமலை துறைமுகத் திற்கு சொந்தமான 500 ஏக்கர் காணியில் முதல் கட்டமாக 100 ஏக்கர் காணியை மூன்று கட் டங்களாக 10.2 பில்லியன் ரூபாவை செலவிட்டு 24 எண் ணெய் தாங்கிகளை நிர்மா ணிக்க உள்ளதாக கூறுகிறார்.

மூலோபாய திட்டமிடல் மற்றும் செயற்திறன் முகாமைத் துவத்தை ஏற்படுத்த உள்ளனராம். இதனைச் செய்ய 10 மில்லியன் டொலர்களாவது செலவாகும். 24 எண்ணெய் தாங்கிகளை நிர் மாணித்து, கட்டடத்தை நிர் மாணித்து 10 பில்லியன் ரூபா செலவில் கடலுக்குள் குழாய் பதிக்க உள்ளனராம்.

இதன் மூலம் திருகோண மலை துறைமுகத்தை நாம் இழப் பது மாத்திரமல்ல அது இந்தி யாவுக்கு சொந்தமாகிவிடும். இந்த நிறுவனத்தை இலங்கை அரசே ஏற்படுத்தவுள்ளதாக விஜேசிங்க கூறுகிறார்.

துறைமுக அதிகார சபையும் இந்திய எண்ணெய் நிறுவனமும் இணைந்து இந்த நிறுவனத்தை ஏற்படுத்தவுள்ளதாக தெரிவித் துள்ளார். இப்படியான அதிகா ரத்தை யார் இந்த அரசாங்கத் திற்கு வழங்கியது. அமைச்சர வையில் இது பற்றி கலந்துரை யாடப்பட்டதா?-என்றார்.

# டுபாயில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் பூட்டு!

டுபாய், பெப். 23

டுபாயில் அமைந்துள்ள இலங்கை துணைத் தூதரகம் நேற்று திங்கட்கிழமை முதல் 24 ஆம் திகதி வரை தற்காலிக மாக மூடப்பட்டுள்ளது.

தூதரகத்தில் பல ஊழி யர்கள் கொரோனா தொற் றுக்கு உள்ளாகியுள்ளமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக டுபாய் துணைத் தூதரகம் விடுத்துள்ள அறிவிப் பில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இதேவேளை, டுபாய் துணைத் தூதரக வளாகத்தை கிருமி நீக்கம் செய்த பின்னர் அலுவலகம் பொதுமக்களுக் காக மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மூடியிருக்கும் இந்த காலத் தில் அவசர நிலைமைகளில் பொதுமக்கள் slcg.dubai@mfa.gov.lk என்ற மின் அஞ்சல் மூலம் துணைத் தூதரகத்தை தொடர்புகொள்ளலாம் என்றும் வலியுறுத்தப்பட் டுள்ளது.



# இராஜதந்திரிகளுக்கு தடுப்பூசி

கொழும்பு, பெப். 23

இலங்கையில் இருக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு கொரோனா தடுப்பூசியை வழங்கும் செயல்திட்டம் நேற்று முதல் முன்னெடுக்கப்படுகின்றது.

இதனடிப்படையில், இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதரி, கொரோனா தடுப்பூசியை நேற்று ஏற்றிக்கொண் டார். அது தொடர்பிலான புகைப்படத்தை அவர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# திருமணத்தில் 150 பேர் கலந்து கொள்ளலாம்

கொழும்பு, பெப். 23

திருமண நிகழ்வில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக் கையை 150 இலிருந்து 50 ஆக குறைக்கும் திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தொற்றின் புதிய திரிபு இலங்கையில் இனம் காணப்பட்டதை அடுத்து திரு மண நிகழ்வுகளில் இந்த தொற்று பரவும் வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகத் தெரிவிக் கப்பட்டதை அடுத்து சுகாதார அதிகாரிகள் மேற்படி மாற் றத்தை சிந்தித்திருந்தனர்.

எனினும் திருமண நிகழ்வில் கலந்து கொள்பவர்களின் எண் ணிக்கையை 150 இல் இருந்து மாற்றாமல் இருக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆரம்ப சுகா தார, தொற்றுநோய் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

திருமண நிகழ்வை நம்பி பல ரும் உள்ளதால் இது தொடர் பில் பல கோரிக்கைகள் விடுக் கப்பட்டுள்ளதால் இந்த மாற் றத்தை இடைநிறுத்தத் தீர்மா னிக்கப்பட்டுள்ளதாக அமைச் சர் தெரிவித்தார்.

அவர்களின் வாழ்வாதாரத் திற்கான கோரிக்கைகள் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுக ளைக் கருத்தில் கொண்டு இதனை மாற்றாமல் இருக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த முடிவு எந்த நேரத்திலும் மாற்றப்படலாம் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

# இளைஞரைக் கடத்திய மூன்றுபேர் கைதாகினர்

கொழும்பு, பெப். 23

பலாங்கொடையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடத்தப்பட் டதாகத் தெரிவிக்கப்படும் சம் பவம் தொடர்பில், மூவர் நேற்று முன்தினம் பலாங்கொடை பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இம்மாதம் 4ஆம் திகதி இளைஞர் ஒருவர் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார் என பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்திச் செல்லப்பட்ட தாகக் கூறப்படும் இளைஞர், செல்லும் வழியில் தப்பித்து யட்டியாந்தொட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பா டொன்றை பதிவு செய்துள்ளா ரென பலாங்கொடை பொலி ஸார் கூறினார்.

இந்த முறைப்பாடு தொடர் பில் பலாங்கொடை பொலிஸா ருக்கு அறிவிக்கப்பட்டு, சம்ப வத்துடன் தொடர்புடையவர் கள் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப் பட்ட நிலையில், கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# பேராயர்- கத்தோலிக்க எம்.பிக்கள் இடையிலான சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 23

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி கட்சி கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையி லான சந்திப்பு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. பேராயரின் ஆலோ சனைக்கு அமைய இந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு பேராயர் உத்தியோகபூர்வ இல் லம் இதனைத் தெரிவித்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சில பிரச்னைகள் தொடர்பில் கலந் துரையாடுவதற்காக அடுத்த மாதம் 2 ஆம் திகதி இந்த சந் திப்பை நடத்துவதற்கு இதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.



பொத்துவில்-பொலிகண்டி பேரணி குறித்து

# சுமந்திரன் எம்.பியிடம் பொலிஸ் வாக்குமூலம்

கொழும்பு, பெப். 23

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் பங்கேற்றமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கிளிநொச்சி பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை இவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக சுமந்திரன் எம்.பி. தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு புதிதாக உறுப்பினர் நியமனம்

கொழும்பு, பெப். 23

அரசியல் பழிவாங்கல் தொடர்பான அறிக்கையை ஆராய நியமிக்கப்பட்ட சிறப்பு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருணவை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகம் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியில், மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ரத்னபிரிய குருசிங்க மேற்கூறிய ஆணையத்திலிருந்து ராஜினாமா செய்துள்ளதாகவும், காலியிடத்தை நிரப்ப மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருண நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதி தம்மிக பிரியந்தா சமரக்கோன் ஜெயவர்தன தலைமையிலான மூன்று பேர் கொண்ட ஆணைக்குழுவில், உயர்நீதிமன்ற நீதிபதி கெமா குமுதினி விக்ரமசிங்க மற்றொரு உறுப்பினராக உள்ளார்.

2020 டிசம்பர் 8 ஆம் திகதி ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் செய்யப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் ஆராய் அமைச்சரவை ஒப்புதலுடன் ஜனவரி 28 அன்று இந்த ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்த அறிக்கை 3 தொகுதிகள் மற்றும் 2,043 பக்கங்களைக் கொண்டுள்ளது. மேலும் இது 2015 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில் அரசியல் பாதிப்புக்குள்ளானதாக கூறிய 1,900 முறைப்பாடுகளை விசாரித்துள்ளது.




# சிறுபான்மை மக்கள் சார்பாக உப ஜனாதிபதிகள் வேண்டும்

## மலையக மக்கள் முன்னணி யோசனை

கொழும்பு, பெப்.23

**இலங்கையில் சிறுபான்மை இனத்தைச்சார்ந்த ஒருவர் ஒரு நாளும் ஜனா திபதியாக தெரிவுசெய்யப்பட முடியாது. எனவே இலங்கையின் சிறுபான்மை இனங்களான வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையக தமிழ் மக்களுக்கு அவர்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் மூவினங்களுக்கான உப ஜனாதிபதிகள் மூவர் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணி யோசனை முன்வைத்துள்ளது.**

இலங்கையின் புதிய அரசியல் யாப்பிற்கான முன்மொழிவுகளை மலையக மக்கள் முன்னணி நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அரசியல் நிபுணர் குழுவிடம் கையளித்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் இந்த ஆவணம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் பேராசிரியருமான சங்கரன் விஜயசந்திரன், முன்னணியின் பிரதித் தலைவர் ஏ.லோரன்ஸ், மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளர் விஸ்வநாதன் புஸ்பா, உப தலைவர் சிவலிங்கம் சதீஸ்குமார், மலையக மகளிர் முன்னணியின் பிரதித் தலைவி திருமதி சுவர்ணலதா இலங்கேஸ்வரன், பிரதிச் செயலாளர் திருமதி.கிருஸ்ணவேணி விஜயகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த முன்மொழிவுகளில் பின்வரும் முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் பிரதான நான்கு தேசிய இனங்களாக சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், மலையக தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் அங்கீகரிக்கப்படுவதோடு பறங்கியர், ஆதிவாசிகள், மலாயர் ஏனைய சிறு சமூகங்களும் இலங்கையின் மக்கள் என குறிப்பிடப்படவேண்டும்.

கல்வி, தொழில்வாய்ப்பு, சுகாதாரம், வாழ்வாதாரம், உயிர்வாழ்வதற்கான உத்தரவாதம் என்பது அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இனங்களின் குறிப்பாக சிறுபான்மை இனங்களின் அடையாளங்களைப் பாதுகாத்தல், அவர்களுடைய கலாசார சமய மரபுகளை பாதுகாத்தல், அவர்களுடைய வரலாற்றுச் சான்றுகளை பாதுகாத்தல், அவர்களுடைய இன அடையாளங்களுக்குரிய மற்றும் தொல்பொருள் சான்றுகளை பாதுகாத்தல் என்பன குழு உரிமைகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடரப்படவேண்டும். அதே நேரம் இலங்கையில்



சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒருவர் ஒரு நாளும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட முடியாது. எனவே இலங்கையின் சிறுபான்மை இனங்களான வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையக தமிழ் மக்களுக்கு அவர்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் மூவினங்களுக்கான உப ஜனாதிபதிகள் மூவர் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டும்.

இரண்டாவது மக்கள் பிரதிநிதித்துவ முறையாக செனட் சபை முறைமை அறிமுகப்படுத்தப்படவேண்டும்.சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு உப ஜனாதிபதி செனட் சபையை தலைமை தாங்கும் பொறுப்பும், சில அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும்.

பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் தேசியப் பட்டியல் உறுப்பினர்களில் 25 வீதத்தினராவது மூன்று சிறுபான்மை இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களாக இருக்க வேண்டும்.

தற்போதைய தேர்தல் முறைமை பற்றிய குறைபாடுகளும் இது சிறுபான்மை மக்களை பாதுகாக்க முடியாத நிலைபற்றியும் பலரும் சுட்டிகாட்டி இருப்பதால் சிறுபான்மை இனங்களின் விகிதாசாரத்திற்கு ஏற்பவும் அவர்கள் பிராந்திய அடிப்படையில் செறிவாகவும், சில பகுதிகளில் பரவலாகவும் வாழ்வதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தேசிய ரீதியானதும், பிராந்திய அடிப்படையிலும், பாராளுமன்ற, மாகாண, உள்ளூராட்சி அடிப்படையிலான அரசியல் பிரதிநிதித்துவத்தை அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

சிங்களமும் தமிழும் தேசிய உத்தியோகபூர்வ நிர்வாக மற்றும் நீதித்துறை மொழிகளாக இருக்கவேண்டும். விசேட தேவையுடையவர்கள் பயன்படுத்தும் மொழிகளும் இதற்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

இலங்கையில் முழுமையான ஒரு அதிகார பகிர்வு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இச்செயல்முறைக்கு முஸ்லிம்கள் மற்றும் மலையக தமிழர்களுக்கான விசேட தன்னாதிக்க அலகுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.அத்தோடு இத்தன்னாதிக்க அலகிற்கு வெளியில் வாழுகின்ற மலையக, முஸ்லிம் மக்களின் கலாசாரம், அபிவிருத்தி, பொருளாதார மேம்பாடு போன்றவற்றை உறுதிப்படுத்தக்கூடிய-நிர்வகிக்கக்கூடிய நிலத் தொடர்பற்ற அபிவிருத்திச் சபைகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

மலையக தமிழர்கள் வாழ்கின்ற பெருந்தோட்ட பிரதேசங்கள் பொது நிர்வாகக் கட்டமைப்புக்குள் முழுமையாக உள்வாங்கப்பட்டு அக்குடியிருப்புகள் கிராமங்களாக அங்கீகரிக்கப்பட்டு நாட்டின் கிராமிய முறைமைக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

இலங்கை அரசியலில் மலையக தமிழர்கள் 50 வருடங்களுக்கு மேலாக புறக்கணிக்கப்பட்டிருந்தமை கவனத்தில் கொண்டு அவர்களை தேசிய அபிவிருத்தி நீரோட்டத்தில் ஒன்றிணைக்கும் வகையில் விசேட ஏற்பாடுகள் புதிய அரசியல் சீர்திருத்தத்தில் கொண்டுவரப்படவேண்டும். பெருந்தோட்ட மக்களுக்கு பாதிப்பாகவுள்ள சட்டங்கள் நீக்கப்படவேண்டும் உட்பட இன்னும் பல யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை இராணுவத்தை அவதானிக்கின்றது அமெ.

## தூதுவர் அலைனா கூறுகிறார்



**கொழும்பு, பெப். 23**

**இலங்கை இராணுவத்தில் ஏற்படும் மாற்றங்களை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்பிளிட்ஸ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமெரிக்க சட்டங்கள் மற்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களங்களத்தின் கொள்கையின் அடிப்படையில் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன என நம்பகத்தன்மை மிக்க தகவல்கள் கிடைத்துள்ள பாதுகாப்புப் படைப்பிரிவுகளுக்கு அமெரிக்கா உதவிகளை வழங்குவதில்லை.

இலங்கைப் படையினர் தற்போதைய எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளக்கூடியவர் களாக மாற்றுவதில் இலங்கைக்கு உதவுவது குறித்து அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உள்ளது.

இதன் மூலம் பிராந்தியத்தினதும் உலகினதும் பாதுகாப்புக்கு பங்களிப்பை வழங்கக்கூடிய நிலையில் அது விளங்குவதை உறுதி செய்யவிரும்புகின்றது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு என்பது தொடர்ந்தும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை வலியுறுத்தும்,இது எங்கள் பயிற்சி உதவி மற்றும் ஈடுபாடுகள் தொடர்பில் அடிப்படையான விடயம்.

இராணுவத்தில் ஏற்படும் மாற்றங்களை நாங்கள் உன்னிப்பாக ஆராய்வோம். படையினர் கொள்கைகள், இராணுவ கலாசாரம் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் உன்னிப்பாக ஆராய்வோம் .

அத்துடன் மனித உரிமைகளை நிலைநாட்டுவது, நம்பகத்தன்மை மிக்க பொறுப்புக்கூறல் மற்றும் நீதி நடைமுறைகளுக்கான இராணுவத்தின அர்ப்பணிப்பையும் நாங்கள் உன்னிப்பாக அவதானிப்போம்-என்றார்.

---

# உள்நாட்டுக்குள் பிரச்னைகளை தீர்க்க பல நாடுகள் உதவிபுரியும்

## இலங்கை அரசு நம்பிக்கை

கொழும்பு, பெப். 23

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை நடப்பு கூட்டத்தொடர் ஆரம்பித்துள்ள நிலையில் உள்நாட்டு விடயங்களை உள்நாட்டிலேயே தீர்த்து கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்திற்கு பல நாடுகள் ஒத்துழைப்பு வழங்கும் என இலங்கை அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு விடயங்களை உள்நாட்டிலேயே தீர்த்து கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை பல உலக நாடுகள் மேற்கொண்டுள்ளதாக, கண்டியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர்கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.



---

# சுமந்திரனின் எஸ்.ரி.எவ் எதற்காக நீக்கப்பட்டது?

## பொலிஸ்மா அதிபரிடம் சபாநாயகர் கேள்வி



கொழும்பு, பெப். 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்எம். ஏ.சுமந்திரனுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளமை குறித்த அறிக்கை ஒன்றைத் தனக்கு தருமாறு பொலிஸ்மா அதிபருக்கு சபாநாயகர் எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்ற நிலையில் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் சுமந்திரன் எம்.பிக்கு வழங்கப்பட்டிருத்த விசேட அதிரடிப்படையினரை நீக்கியது ஏன் என்ற கேள்வி எதிர்க்கட்சி உறுப்பினர்களினால் எழுப்பப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் பாராளுமன்றதத்திலும் தொடர்ச்சியாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இது குறித்து கேள்வி எழுப்பிய வேளையில்,சுமந்திரன் எம்.பி விடுதலைப் புலிகளின் நினைவேந்தல்களில் கலந்து கொள்கின்றார், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்து கொண்டார்.

இவ்வாறான செயற்பாடுகள் தேசிய பாதுகாப்பு விடயங்களை கேள்விக்கு உட்படுத்தும் விடயமாகின்ற காரணத்தினாலும், இலங்கையின் பாதுகாப்புப் படைகளை குற்றம் சுமத்திக்கொண்டு அவர்களின் பாதுகாப்பைக் கேட்பது என்ன நியாயம் என்ற கேள்வி எம்மத்தியில் உள்ளதால் நானே சுமந்திரன் எம்.பிக்கான பாதுகாப்பை நீக்க நடவடிக்கை எடுத்தேன் என விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பதில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் எதிர்க்கட்சியினரின் தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் விசேட பாதுகாப்பை நீக்கியமை குறித்து பொலிஸ்மா அதிபர் அறிக்கை ஒன்றைத் தருமாறு கடந்த வெள்ளிக்கிழமை சபாநாயகர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இது குறித்து பொலிஸ்மா அதிபரின் பதில் இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

---

# இலங்கைத் தமிழரின் கௌரவமான வாழ்வை உறுதிப்படுத்துவது இந்திய அரசின் பொறுப்பு!

## சொல்கிறார் இந்திய பாதுகாப்பு அமைச்சர்

சென்னை, பெப். 23

இலங்கையில் தமிழ் அகதிகள் சமத்துவம் கௌரவம் சமாதானம் ஆகியவற்றுடன் வாழ்வதை உறுதி செய்வது குறித்து இந்திய மத்திய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரி வித்துள்ளார்.

சேலத்தில் இடம்பெற்ற பா.ஜ.கவின் இளைஞர் அணியின் மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில்தமிழ்அகதிகளை வலுப்படுத்தும்நடவடிக்கைகளில் மோடி தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளார். 2015 இல் பிரதமரான பின்னர் மோடி யாழ்ப்பாணத்துக்கு சென்றுள்ளார். யாழ்ப்பாணம் சென்ற ஒரேயொரு பிரதமர் அவர். உள்நாட்டு யுத்தம் காரணமாக வீடுகளை இழந்த சகோதர சகோதரிகளுக்கு நாங்கள் வீடுகளை வழங்கியுள்ளோம்-என்றார்.

---

# நேரடி அரசியலில் ஈடுபட இணங்கினார் ஜனாதிபதி



கொழும்பு, பெப். 23

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து நேரடி அரசியலில் ஈடுபடுமாறு பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ள நிலையில் அதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என பங்காளிக்கட்சிகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஜனதிபதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சு ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள், கொவிட் -19 தடுப்பு வேலைத்திட்டங்களை அரசாங்கம் எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்தும் பேசப்பட்டதாகக் கூறப்படுகின்ற நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் பங்காளிக் கட்சிகள் ஏற்படுத்திக்கொண்டுள்ள முரண்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு சில உறுப்பினர்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டுள்ள நிலையில் அதற்கான காரணத்தையும் ஜனாதிபதிக்கு அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் உள்ளது, ஆனால் நாட்டின் தலைமைத்துவம் ஜனாதிபதியிடம் உள்ளது. எனவே ஜனாதிபதி அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். அதுவே அரசியல் ரீதியில் அரசாங்கத்தை பாதுகாக்கவும் சாதகமாக அமையும் என்பதையும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை எடுத்துக்கொள்வதா அல்லது மாற்று வழிமுறையைக் கையாள்வதா என்பது குறித்து தெளிவான நிலைப்பாடு எதனையும் பங்காளிக்கட்சிகள் தெரிவிக்காதுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி நேரடியான அரசியல் செயற்பாடுகளில்ஈடுபட இணக்கம்தெரிவித்துள்ளார் எனவும், அவரது தலைமைத்துவத்தை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை பங்காளிக்கட்சிகள் முன்னெடுக்கும் எனவும் கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

---

# இம்ரான்கானுடன் சந்திப்பு இறுதி நேரத்தில் ரத்தானது

## கவலையில் ஹக்கம், ரிஷாத்



கொழும்பு, பெப். 23

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர்மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளி விவகார அமைச்சர் ஆகியோருடன் மாத்திரமே சந்திப்புகளை நடத்தவுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களான ஹக்கீம், ரிஷாத் ஆகியோருடனான சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோரை அண்மையில் சந்தித்து, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் கலந்துரையாடியிருந்தார். இதன் போது பாகிஸ்தான் பிரதமரைச் சந்திப்பதற்கு நேரம் கோரியிருந்தனர். இதன்படி குறுகிய நேரத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், குறித்த சந்திப்பு நடைபெறாது என பாகிஸ்தான் தூதுவரால், மேற்படி இரு தலைவர்களுக்கும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

சந்திப்பு இரத்துக்கான காரணம் வெளியாகாதபோதிலும், அரச உயர்மட்டத்திலிருந்து விடுக்கப்பட்ட அழுத்தத்தால் அவ்வாறு நடந்திருக்ககூடும் என நம்பப்படுகின்றது.



# தடைகள் குறித்து மனித உரிமைகள் பேரவை முடிவெடுத்தால் அமெரிக்கா எடுக்கப்போகும் நிலைப்பாடு என்ன?

## அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் வெளியிட்ட கருத்துக்கள்



மனித உரிமை பேரவை பயணத் தடைகள் சொத்துக்களை முடக்குதல் போன்றவற்றை முன்னெடுப்பது குறித்து தீர்மானித்தால் அமெரிக்காவின் எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கும் என்பது குறித்தும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அமெரிக்க முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான சாத்தியப்பாடுகள் எவ்வாறானதாக காணப்படும் என்பது குறித்தும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் சில கருத்துக்களை முன்வைத் துள்ளார்.

ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றிலேயே இது தொடர்பில் அவர் பேசியுள்ளார்.

அவரது நேர்காணலில் இருந்து முக்கியமான சில பகுதிகள் வருமாறு:

**மனித உரிமை பேரவை பயணத் தடை கள் சொத்துக்களை முடக்குதல் போன்ற வற்றை முன்னெடுப்பது குறித்து தீர்மானித் தால் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன?**

இந்த விடயம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளிற்கு பரிந்துரைகளை விதித்துள் ளது. ஏனைய நாடுகளை போல நாங்கள் அதனை பரிசீலனை செய்வோம், பாரிய மனித உரிமை மீறல்கள் குறித்து நாங்கள் எங்கள் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக ஆராய்வோம் - உலகின் எந்த பகுதி குறித்தும்.

**தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அமெரிக்க முதலீட்டாளர்கள் இலங்கை யில் முதலீடு செய்வதற்கான சாத்தியப் பாடுகள் குறித்து?**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் புதிய தீர்மானம் அது குறித்து விவாதங்கள் கருத்துடன்பாடுகள் குறித்து இறுதி வடிவம் எவ்வாறானதாகயிருக்கும் என்பது குறித்து ஊகங்களை வெளியிட முடியாது அதற்கு நாட்கள் உள்ளன.

இலங்கை அமைதியான பன்முகத் தன்மை மிக்க பலகலாச்சார நாடு என்ற தனது நற்பெயரை காப்பாற்றுவதற்காக சர்வதேச சமூகம் மற்றும் வர்த்தக சமூகங்களுடன் இலங்கை தொடர்ந்தும் ஆழ மான ஈடுபாட்டை கொண்டிருக்கும் என நாங்கள் கருதுகின்றோம்.

சுற்றுலாத்துறை மற்றும் முதலீட்டிற்கான நாடு என்ற இலங்கையின் அழைப்பின் இதயமாக இதுவே காணப்படு கின்றது. நாடு ஒன்று மனித உரிமைகளை பாதுகாப்பதில் எவ்வாறு செயற்படுகின்றது என்பது அமெரிக்க வர்த்தகர்களுக்கும் நுகர்வோருக்கும் முக்கியமான விடயம்.

இலங்கை எதிர்கொள்ளும் முக்கியமான விடயங்களிற்கு தீர்வை காண்பதற்கு ஆக்கபூர்வமாக பணியாற்றுவது குறித்த இலங்கையின் அர்ப்பணிப்பு என்பது அமெரிக்காவிற்கும் ஏனைய சர்வதேச முதலீட்டாளர்களிற்கும் மிக முக்கியமான மீள் உறுதியளித்தல் ஆகும்.

அமெரிக்காவே இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாகும் இதனடிப்படையில் மனித உரிமைகளை பலப்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மிகவும் முக்கியமானது. சமூக அரசியல் நீதி சூழமைவில் மாத்திரமல்லாமல் மக்களின் பொருளாதார செழிப்பின் அடிப்படையிலும் இது முக்கியமானது.



> **ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை மற்றும் ஐக்கிய நாடுகள் அலுவலகம் ஆகியவற்றுடன் முன்கூட்டிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருவதாக இலங்கை எப்போதும் தெரிவித்துவந்துள்ளது. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து இலங்கை ஆக்கபூர்வமானஅணுகுமுறையை பின்பற்றும் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் தனது உறவுகளை வளர்த்துக்கொள்ளும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.**

இதேவேளை கடந்த பல வருடங்களாக இலங்கையில் கேள்விப்பத்திரங்களிற்கு போட்டியிடும் நடவடிக்கைகளின் போது அமெரிக்க நிறுவனங்கள் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

கேள்விபத்திர நடைமுறைகளில் மேற்கொள்ளப் படும் நியாயமற்ற திருத்தங்கள் இலங்கை வர்த்தக நடவடிக்கைகளிற்கு உகந்த நாடில்லை என்ற செய்தியை அமெரிக்க நிறுவனங்களிற்கு தெரிவிக்கலாம் இது உண்மையில் துரதிஸ்டவசமானது.

**இலங்கை அரசாங்கம் ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை நிராகரித்துள்ளமை குறித்து?**

இலங்கை அரசாங்கம் குறிப்பிட்ட அறிக்கை குறித்து தெளிவான பதில் அறிக்கையை வெளியிட்டது அது இராஜதந்திர மட்டத்தில் பகிரப்பட்டுள்ளது.

இந்த சூழமைவின் கீழ் வழங்கப்பட்ட பதில் சந்தேகத்திற்கு இடமின்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் உறுப்புநாடுகளால் ஆராயப்படும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை மற்றும் ஐக்கிய நாடுகள் அலுவலகம் ஆகியவற்றுடன் முன்கூட்டிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருவதாக இலங்கை எப்போதும் தெரிவித்துவந்துள்ளது.

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து இலங்கை ஆக்கபூர்வமானஅணுகுமுறையை பின்பற்றும் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் தனது உறவுகளை வளர்த்துக்கொள்ளும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.


**எதிர்கால பாதுகாப்பு உறவுகள் குறித்து?**

அமெரிக்க சட்டங்கள் மற்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களங்களத்தின் கொள்கையின் அடிப்படையில் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன என நம்பகதன்மை மிக்க தகவல்கள் கிடைத்துள்ள பாதுகாப்பு படைப்பிரிவுகளுக்கு அமெரிக்கா உதவிகளை வழங்குவதில்லை. இலங்கையின் பாதுகாப்பு படையினர் தற்போதைய எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளக்கூடியவர்களாக மாற்றுவதில் இலங்கைக்கு உதவுவது குறித்து அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உள்ளது.



**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடர் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் அனைத்துத் தரப் பினராலும் எதிர்பார்க்கப்பட்ட இலங்கை குறித்த பிரேரணையின் நகல் வெளி வந்திருக்கின்றது. ஜெனிவாவில் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என எதிர்பார்த்த அனைவருக்கும் கடும் ஏமாற் றத்தைக் கொடுப்பதாக இந்த நகல் பிரேரணை அமைந்திருக்கின்றது. கடந்த வருடங்களில் ஏமாற்றப்பட்டதைப்போல இந்த வருடமும் ஜெனிவாவில் தமிழ் மக்கள் ஏமாற்றப்படப்போகின்றார்கள் என்பதற்கான ஒரு முன்னறிவித்தலாக இந்தப் பிரேரணை அமைந்திருக்கின்றது.**

- அகிலன் -



# ஜெனிவாவில் மீண்டும் ஏமாற்றம்! தமிழர் தரப்பின் உபாயம் என்ன?

ஜெனிவா கூட்டத் தொடர் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் இம்முறை ஏற்படுத்தியிருந்தமைக்கு பல காரணங்கள் இருந்தன. பொறுப்புக் கூறல் உள்ளிட்ட நிலைமாறு கால நீதியை நிலைநாட்டுவதற்கு தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கப்பட்டுவந்த கால அவகாசம் முடிவுக்கு வருகின்றது என்பது முதலாவது காரணம். கால அவகாசத்தைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொண்ட இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறல் என்பன உட்பட்ட விடயங்களில் ஆக்கபூர்வமான எந்த ஒரு செயற்பாட்டையும் முன்னெடுக்கவில்லை என்பதை மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் கூட தனது அறிக்கையில் சுட்க்காட்டியிருந்தார்.

மூன்று பிரதான தமிழ்க் கட்சிகள் இணைந்து தமது கோரிக்கைகளை எழுத்து மூலமாக மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பிவைத்திருந்தன. இணைத் தலைமை நாடுகள் தயாரிக்கும் பிரேரணையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அது அமையும் என்ற எதிர்பார்ப்பு இருந்தமை இரண்டாவது காரணம். மூன்று பிரதான தமிழ்க் கட்சிகளைவிட, வடக்கு கிழக்கில் தீவிரமாகச் செயற்பட்டுவரும் சிவில் சமூக அமைப்புக்களும் இந்தக் கோரிக்கை மனுவில் கைச்சாத்திட்டிருந்தமை இதனை மேலும் பலப்படுத்தியிருந்தது. இம்முறை பிரேரணை கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதற்கு இது இரண்டாவது காரணம்.

'பொ - பொ' பேரணி மூலமாக தமிழ் மக்கள் தமது கோரிக்கை என்ன என்பதைத் தெளிவாகக் கூறியிருந்தார்கள். மனித உரிமைகள் பேரவையில் மக்களின் இந்தக் கோரிக்கைகளும் செல்வாக்கைச் செலுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. இதனைவிட இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு, இராணுவ மயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர் போராட்டங்கள், ஜனநாயக விரோத செயற்பாடுகள் என்பனவும் சர்வதேச ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்துவனவாகவே இருந்துள்ளன. இவை அனைத்தும் கடுமையான தீர்மானம் ஒன்றுக்கு பேரவையை நிர்ப்பந்திக்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டது.

இதனைவிட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் பச்சலெட் முன்வைத்த சிபார்சுகளில் குறைந்த பட்சமாவது இந்தப் பிரேரணையில் உள்வாங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர்கள் - நிபுணர்களைக் கொண்ட குழு போன்றன வெளியிட்ட அறிக்கைகளும் ஆணையாளர் பச்சலெட்டின் பரிந்துரைகளை அடியொற்றியதாகவே அமைந்திருந்தது. தமிழர் தரப்புக்கு இவை உற்சாகத்தைக் கொடுத்தன.

பொறுப்புக்கூறல் என்ற விடயம் மனித உரிமைகள் பேரவையிலிருந்து எடுக்கப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது முக்கியமான விடயமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இரண்டாவதாக இலங்கை தொடர்பில் தொடர்ந்து நடக்கின்ற மனித உரிமைகளை அவதானிக்க மனித உரிமைகள் அலுவலகம் ஒன்றை அமைப்பது தொடர்பிலும், மூன்றாவதாக நீதிமன்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு சாட்சியங்களை திரட்டுவது உள்ளிட்ட விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போது வெளியான வரைபை பார்க்கின்றபோது, இதுவரை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மிகவும் பலவீனமான ஒன்றாகத்தான் இதனைப் பார்க்க வேண்டும். பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை பேரவையிலிருந்து வெளியில் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கின்ற நிலையில், அவ்விடயம் பெரியளவில் குறிப்பிடப்படவில்லை. சர்வதேச குற்றவியல் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லவேண்டும் என்ற கோரிக்கை தவிர்க்கப்பட்டுள்ளது. இவை தமிழர் தரப்புக்கு கடும் ஏமாற்றமாக உள்ளது.

ஆணையாளரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த உலகளாவிய நீதிப்பொறிமுறையின் ஊடாக, இலங்கை விவகாரத்தை கையாளுவது, பொருளாதார மற்றும் பயணத் தடைகளை மேற்கொள்வது போன்ற எந்தவொரு விடயமும் உத்தேச அறிக்கையில் இல்லை. ஏற்கனவே முன்வைக்கப்பட்ட பிரேரணைகளின் அடிப்படையில், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்திற்குள்ள கடப்பாடுகளை பிரேரணை மீளவும் வலியுறுத்துகின்றது. ஆணையாளரின் அறிக்கையுடன் ஒப்பிட்டால், உத்தேச அறிக்கை மிகவும் பலவீனமானதோர் அறிக்கை.

இவ்வாறானதொரு மென்போக்குள்ள பிரேரணையைக்கூட, கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்பன்பில இதனைத் தெரிவித்திருக்கின்றார். இலங்கைக்கு எதிராக ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள பல பிரேரணைகள் அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று எதிர்வரும் காலங்களில் இலங்கைக்கு எதிரான பிரேரணைகளை நிராகரிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இறுதியாக வெளிவந்திருந்த 30-1 பிரேரணையில் அரசியல் தீர்வு தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக 13 ஆவது திருத்தத்தின் மூலமாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டிருந்தது. 13 ஆவது திருத்தத்தை தமக்கான இறுதித் தீர்வாக தமிழ்த் தரப்பினர் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் தற்போதைய நிலையில் இருக்கக்கூடிய குறைந்த பட்சத் தீர்வாக அதுதான் உள்ளது. அதனைக்கூட இல்லொதொழிக்க வேண்டும் என்பது தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ள நிலையில், புதிய உத்தேச பிரேரணை அது குறித்து கூட எதனையும் தெரிவிக்கவில்லை.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழ்க் கட்சிகள் அமைப்புக்களிடம் கூட தெளிவான - உறுதியான நிலைப்பாடு ஒன்று இல்லாதிருப்பது கூட இதற்குக் காரணமாக இருக்கலாம். மூன்று தமிழ்க் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் இணைந்து அனுப்பிவைத்த யோசனையில் கூட அது குறித்து தெளிவான விளக்கம் இல்லை. முக்கியமான விவகாரங்களில் ஒருமித்த குரலில் பேசக்கூடிய நிலையில் தமிழர் தரப்பு இல்லை என்பது எமது பக்கத்திலுள்ள முக்கிய குறைபாடு. அவ்வாறான நிலையில், சர்வதேச சமூகத்துக்கு அழுத்தம் கொடுப்பதும் சாத்தியமற்றதாகலாம்.

இப்போது வெளிவந்திருப்பது முதலாவது வரைபுதான். இதில் திருத்தங்களை முன்வைக்க முடியும். இதனை இன்னும் பலப்படுத்தவும் முடியும். பலவீனப்படுத்தவும் முடியும். கடந்த வருடங்களில் வெளிவந்த தீர்மானங்களைப் பொறுத்தவரையில் முதல் வரைபைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கம் வெற்றிபெற்றிருந்தது. பிரேரணைக்கு இணை அனுசரணையை வழங்குவதாகக்கூடியே அதனை அவர்களால் செய்ய முடிந்தது. தற்போதைய அரசாங்கம் இணை அனுசரணைக்கு முன்வரும் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. அதனால், தற்போதைய வரைவு இறுதியாக்கப்படுவதற்கு முன்னர் அதில் மாற்றங்களைச் செய்வதற்கான முயற்சிகளை தமிழர் தரப்பு முன்னெடுக்க முடியும்.

ஆனால், ஜெனீவாவுக்குள் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியும் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. ஐ.நாவின் முன்னாள் உதவிச் செயலாளர் நாயகமும், இலங்கை குறித்து ஆராய்வதற்காக ஐ.நா. பொதுச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராகச் செயற்பட்டவருமான சாள்ஸ் பீட்றி தெரிவித்திருக்கும் கருத்து ஒன்றும் முக்கியமானது. 'இலங்கையில் யுத்தத்தின் போது மோசமாகப் பாதிக்கப்பட்ட - வேண்டுமென்றே அநீதி இழைக்கப்பட்ட - மக்களுக்கு நீதி கிடைப்பதற்காக ஐ. நாவில் தங்கியிருப்பதில் பயனில்லை' என்று அவர் கூறியிருந்தார். ஐ.நா.வுடன் பல வருட அனுபவத்தைக் கொண்ட அவர், அதன் அடிப்படையில்தான் இந்தக் கருத்தை முன்வைத்திருக்கின்றார்.

'மக்கள் ஐ.நாவை நம்பி அதில் தங்கியிருந்தால் ஏமாற்றமே அடைவார்கள். இத்தகைய விடயங்களில் உண்மையைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஒழுங்கு முறைகள், ஏற்பாடுகள், விதிகள் ஐ.நாவிடம் உள்ளன. ஆனால், அதற்கான கட்டமைப்புத் திடசங்கற்பம் ஐ. நாவிடம் இல்லை. ஆகவே அதை - ஐ.நாவை - நம்பியிராமல், தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதியைத் தேடும் முயற்சியை சம்பந்தப்பட்டோர் தம்பாட்டில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். வேறுவழியின்றி அதற்குப் பின்னால் ஐ.நா. வரும். அப்படி நிகழ்ந்தால் எதிர்பாராத வெற்றியாக அது அமையும்' என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில் இறுதிவேளையில்தான் அவர்கள் செயற்படத் தொடங்கியிருந்தார்கள். திட்டமிட்ட முறையில் கடந்த வருடத்திலிருந்தே இராஜதந்திர மட்டத்தில் செயற்பட்டிருநந்தால் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்க முடியும். சர்வதேச நாடுகள் தமது நலன்களை இலக்காக வைத்துத்தான் செயற்படுவார்கள். தமிழ்த் தலைமைகள் இந்த 12 வருடகால அனுபவத்தில் எவ்வாறு சர்வதேச சமூகத்தை அணுகவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளவில்லை. அதனால், போர் முடிவுக்கு வந்து 12 வருடங்களின் பின்னரும் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. மீண்டும் ஏமாற்றம்தான் மிஞ்சியுள்ளது. இந்த நிலையிலிருந்து அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கு என்ன செய்ய முடியும்?

# வடக்கு தீவுகளை எந்த நாட்டுக்கும் அரசாங்கம் வழங்கப்போவதில்லை

## அமைச்சர் டலஸ் திட்டவட்டம்



கொழும்பு,பெப்.23

**வடக்கிலுள்ள தீவுகளை எந்த நாட்டுக்கும் வழங்கப்போவதில்லை என மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளுக்கு தற்போது டீசல் மூலமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அங்கு காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 12 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் சீனாவின் பங்களிப்புடன் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருந்தது.

இதேவேளை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, வடக்கில் இந்தத் திட்டத்துக்கு 12 மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக இலங்கைக்கு வழங்குவதாகவும், அரசாங்கத் திடம் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பில் அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் மக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு முடிவு எட்டப்படும் என்றும் அமைச்சர் டலஸ் குறிப்பிட்டார். (எ)



# வவுனியாவில் மாணவர்களுக்கு நேற்று மரக்கன்றுகள் வழங்கல்

வவுனியா,பெப்.23

மண்ணுக்குப் பரிசளிப்போம் மண் நமக்கு மட்டுமல்ல நமது சந்ததிக்கும் பரிசளிக்கும். எமது காலத்தில் எமது மண்ணையும் வளத்தையும் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் வழங்கும் பசுமைப்புரட்சி செயல்திட்டம், வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒரு இலட்சம் பயன்தரும் மரங்களை இலக்கு வைத்து வாழ்வாதார பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் இந்த செயல்திட்டம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைத் தொடர்ந்து வவுனியா மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக நேற்று நெடுங்கேணி கற்பகா அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (எ)

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை இலங்கையில் அமைப்பதற்குத் திட்டம்

கொழும்பு,பெப்.23

இலங்கையில் புதிதாக எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூறினார்.

கொழும்பு, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் இந்த சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

அம்பாந்தோட்டை - சப்புகஸ்கந்தை மற்றும் கொழும்பில் அமையவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் நாட்டின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அமைக்கப்படவுள்ளன.

மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக இரண்டு துறைமுகங்களில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் இதற்கு பெருமளவிலான உட்கட்டமைப்பு மேம்பாடு தேவைப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில் இந்தத் திட்டத்துக்கு 100 ஏக்கர்களை முதல் கட்டமாகப் பயன்படுத்த துறைமுகங்களுடன் ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# உரிய திட்டமிடலற்ற தடுப்பூசி செயல்திட்டத்தால் சுகாதார ஊழியர்கள், மக்களுக்கு அசௌகரியம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம்



கொழும்பு,பெப்.23

உலக நாடுகள் அனைத்தும் முறையான திட்டமிடலின் அடிப்படையில் கொரோனா தடுப்பூசிகளை வழங்குகின்றன. ஆனால், இலங்கையில் அவ்வாறு எந்தவொரு திட்டமிடலுமின்றி தடுப்பூசி வழங்கப்படுவதால் சுகாதார ஊழியர்களும், பொது மக்களும் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உலக நாடுகள் அனைத்தும் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், முதியவர்களுக்குமே தடுப்பூசி வழங்கலில் முன்னுரிமை வழங்கியுள்ளன. ஆனால், இலங்கையில் எவ்வித திட்டமிடலுமின்றி தடுப்பூசி வழங்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டமிடலொன்று தயாரிக்கப்பட்டு ஜனவரி 15 ஆம் திகதி உலக சுகாதார ஸ்தாபனத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், தற்போது அந்தத் திட்டமிடல்கள் முழுமையாக மாற்றப்பட்டுள்ளன. இதனடிப்படையில் யாருடைய தேவைக்காக, எந்தத் தொழில்நுட்பக் குழுவின் ஆலோசனைக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை.

இதன்மூலம் சுகாதார ஊழியர்கள் கடும் நெருக்கடிகளுக்கும், சிக்கல்களுக்கும் முகங்கொடுத்துள்ளனர். புதிய வேலைத்திட்டம் தொடர்பில் வழிகாட்டல் ஆலோசனைகளை வெளியிடுவதற்குக் கூட சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவால் முடியாமல் போயுள்ளது.

உதாரணமாக 30 - 60 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுகின்றது என்றால் குறிப்பிட்ட நபர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதும் தெரியப்படுத்தப்படவில்லை. தேர்தல் இடாப்பின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றனவா? அல்லது பொதுச் சுகாதார பிரிசோதகர்கள் மூலம் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா? என்பதும் தெளிவுபடுத்தப்படவில்லை. இவ்வாறான செயல்பாடுகள் மூலம் மக்களும் கலவரமடைந்துள்ளனர்- என்றார். (எ)




# கட்டாயத் தகனத்துக்கு எதிராக கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,பெப்.23

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் கட்டாயத் தகனம் செய்யப்படுகின்றமையை எதிர்த்தும், நிபுணர் குழுவின் பரிந்துரைகளை உடன் அமுல்படுத்துமாறும் வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலவந்த தகனத்துக்கு எதிரான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில், ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் இன்று பிற்பகல் 3 மணியளவில், இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இன்று இலங்கைக்கு விஜயம் செய்யும் நேரத்தில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவிக்கையில்:

கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விஷேட நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை தற்போது ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

அடக்கம் செய்தல் மற்றும் தகனம் செய்தல் ஆகிய இரண்டு பரிந்துரைகள் அந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. இதனடிப்படையிலேயே உடல் அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

எனினும், அரசாங்கம் பலவந்தமாக தகனம் செய்யும் முறையை மாத்திரமே கடைப்பிடித்து வருகின்றது. இந்நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட்டு பிற மதத்தவர்களின் உரிமைகள், அரசாங்கத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இதனடிப்படையிலேயே எமது மத உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம் இடம்பெறவுள்ளது. இதன்போது, விஷேட நிபுணர் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள முன்மொழிவுகளை அமுல்படுத்துமாறு கூறி அரசாங்கத்துக்கு எமது எதிர்ப்பை வெளிக்காட்ட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனத் தெரிவித்தார். (எ)

# கருத்துக்களை முன்வைக்கிறதே தவிர அரசிடம் உரிய திட்டங்கள் இல்லை

## பாலித ரங்கே பண்டார விமர்சனம்



கொழும்பு,பெப்.23

**அரசாங்கத்தரப்பினர் நாளாந்தம் பல கருத்துக்களை முன் வைக்கிறார்களே தவிர அவற்றைச் செயல்படுத்த அவர்களிடம் எவ்விதமான திட்டங்களும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.**

சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் பரவல் நாட்டின் மிகப்பெரும் பிரச் னையாக உருவெடுத்துள்ளது. ஆரம்பத்திலிருந்தே அரசிடம் இந்தக் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த எந்தவித வழி முறைகளும் இருக்கவில்லை. பல்வேறுபட்ட தரப்பினருக்கு தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக் கும் அரசிடம் தற்போது வரை யில் ஊடகவியலாளர்களுக்கு இந்த கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதற்கான எவ்வித ஆயத்தங்களும் இல்லை.

உண்மையில் ஊடகவியலா ளர்கள், சுகாதாரத் துறையின ருக்கு இணையான பணியை செய்து வருகின்றனர், நாடு பூரா கவும் எவ்வாறான சந்தர்ப்பத் திலும் எத்தகைய பிரச்னையின் போதும் பணியாற்றக்கூடியவர் கள், சமூகத்துக்காக அவர்களின் சேவை அளப்பரியது. அவ்வாறெனில் இந்த சேவையை பாதுக்காக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

மக்களுக்கு பல்வேறுபட்ட விடயங்களையும் அறியப்படுத் தும் அவர்களுக்குச் சரியான வற்றை பெற்றுக்கொடுக்க வேண் டுமென நாம் கேட்கின்றோம்.

ஒரு நாளைக்கு 6 இலட்சம் தடுப்பூசிகளை பெற்றுக் கொடுக்க எதிர்பார்த்திருப்ப தாகவே அரசாங்கம் தெரிவித்தி ருந்தது. ஆனாலும், இந்தியாவி டமிருந்து இலவசமாக 5 இலட் சம் தடுப்பூசிகள் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளன. இருப்பினும், 1.6 மில்லியன் தடுப்பூசிகளை எமது நாட்டுக்கு கொண்டுவர வேண்டுமென அரசாங்கத்துக்கும், சுகாதாரத் துறையினருக்கும் ஒரு இலக்கு இருப்பதாக தெரிவிக்கப்பட் டது. ஆனால், இதுவரையில் 1.6 மில்லியன் தடுப்பூசிகளை எவ்வாறு பெற்றுக்கொள்வ தென்று அரசாங்கம் ஒரு திட் டத்தை வகுக்கவில்லை.

இந்நிலையில் 3 மாதங்க ளுக்குள் நாட்டில் கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக்கொடுத்து முழுமையாக இந்தத் தொற் றைக் கட்டுப்படுத்துவோமென தெரிவித்துள்ளனர். பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைக்கிறார்களே தவிர அவற்றை நடைமுறைப்படுத்த எந்த செயல்திட்டத்தையும் அவர்களால் முன்னெடுக்க முடியாத நிலை உருவாகியுள் ளது. அவ்வாறெனில் 3 மாத காலப்பகுதிக்குள் இவர்கள் எவ்வாறு நாட்டில் முழுமை யாக வைரஸை கட்டுப்படுத்து வார்களென்று நாம் கேள்வி எழுப் புகின்றோம்- என்றார். (எ)



## பஸ் விபத்து: 13 பேர் படுகாயம்

ஹற்றன்,பெப்.23

நானுஓயா பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நுவரெலியா - ஹற் றன் பிரதான வீதியில் இடம் பெற்ற பஸ் விபத்தில் 13 பேர் படுகாயங்களுக்குள்ளாகினர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுப் பிற் பகல் 2.30 மணியளவில் இடம் பெற்றது என பொலிஸார் கூறினர்.

மொனராகலை பகுதியிலி ருந்து தலவாக்கலை நோக்கி மரண வீடு ஒன்றுக்காக சென்று கொண்டிருந்த போது, ரதல்ல குறுக்கு வீதியில் முன்பு சென்ற கனரக வாகனம் ஒன்றுடன் மோதி இழுத்துச் சென்று மண் மேட்டில் மோதுண்டு பஸ் குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

இந்த பேருந்தில் 18 பேர் பயணித்ததுடன், இதில் 13 பேர் படுகாயங்களுடன் நுவரெலியா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தவிபத்து தொடர்பான மேலதிக விசார ணைகளை நானுஓயா போக் குவரத்து பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ)

# புதிய அரசமைப்பு யோசனை அடுத்த வாரம் அறிவிக்கப்படும்

## பொதுஜன பெரமுன தகவல்

கொழும்பு,பெப்.23

புதிய அரசமைப்பு தொடர் பில் பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சியினர் தங்க ளின் கட்சி மட்டத்திலான யோசனைகளை தனித்து முன் வைத்துள்ளனர். அரசமைப்பு தொடர்பிலான அனைத்து யோசனைகளும் பரிசீலனை செய்யப்பட்டு பொதுஜன பெர முனவின் யோசனை அடுத்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என பொது ஜன பெரமுனவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு புதிய அரசமைப்பு உருவாக்கம், நாட் டுக்குப் பொருந்தும் வகையி லான அரசமைப்பு உருவாக்கம் ஆகியவை பொதுஜன பெர முன தலைமையிலான அரசாங் கத்தின் பிரதான தேர்தல்கால வாக்குறுதிகளாக காணப்பட் டன. இதற்கமைய பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும் பான்மை ஆதரவுடன் அரசாங் கத்தை ஸ்தாபித்ததுடன் அரச மைப்பின் 19 ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்பட்டு அரச மைப்பின் 20ஆவது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும் பான்மை ஆதரவுடன் நிறை வேற்றப்பட்டது.

இதேவேளை, தேர்தல் முறை மையில் மாற்றம் ஏற்படுத்து வது பொதுஜன பெரமுனவின் பிரதான யோசனையாகும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். புதிய அரசமைப்பின் யோசனைகள் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜ பக்ஷவால் நிபுணர் குழுவின ரிடம் முன்வைக்கப்பட்டது.

பொதுஜன பெரமுனவின் யோசனைகளில் தேசிய கொடி யில் மாற்றம், ஒற்றையாட்சி ஆட்சி முறைமை, பௌத்த மதம் அரச மதம் உள்ளிட்ட விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. பொதுஜன பெர முனவின் கூட்டணியமைத் துள்ள கட்சியினர் தமது கட் சியின் தனிப்பட்ட நிலைப் பாட்டை முன்வைத்துள்ளனர்.

அனைத்துத் தரப்பினரது யோசனைகளும் ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளக் கூடிய வகை யிலான யோசனை எதிர்வரும் வாரம் உத்தியோகபூர்வமாக குழுவினரிடம் முன்வைக்கப் படும் என பொதுஜன பெர முனவின் ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது. (எ)

# இத்தாலியில் இலங்கையர் இருவர் கொரோனா தொற்றால் உயிரிழப்பு

கொழும்பு,பெப்.23

இத்தாலியில் வசித்து வந்த இலங்கையர்கள் இருவர் கொரோனா வைரஸ் தொற் றால் உயிரிழந்தனர்.

இத்தாலியின் மிலான் மற் றும் ரோம் ஆகிய நகரங்களில் வசித்து வந்தவர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

கொட்டாவ பகுதியைச் சேர்ந்த 57 வயதுடையவர், கொரோனா தொற்றுக்குள் ளாகி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்தார் எனவும் அதே போன்று காலி பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடையவரும், கொரோனா தொற்றுக்குள் ளாகி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 20 ஆம் திகதி உயிரிழந்தார் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

இந்த இருவரும் 20 வரு டங்களுக்கும் மேல் இத்தா லியில் தமது குடும்பத்துடன் வசித்து வந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இந்தியாவுக்கோ சீனாவுக்கோ தோட்டங்கள் விற்கப்படாதாம்

## ராமேஷ்வரன் கூறுகிறார்



துலவாக்கலை,பெப்.23

பெருந்தோட்டங்கள் இந் தியாவுக்கோ அல்லது சீனா வுக்கோ விற்பனை செய்யப்பட மாட்டாது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், நுவரெ லியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 24 தனி வீடுகளை அமைத்துக் கொடுக்க நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது. தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் வீடமைப்பு திட்டத்தின் கீழ் இவ்வாறு அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரி விக்கையில்:

நாம் இந்தியத் தூதுவரை வழமையாக சந்தித்து கலந்து ரையாடுவோம். இந்தியாவால் மலையகத்துக்கு 14 ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டன. அந் நாட்டின் உதவியுடன் உட்கட் டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. பாட சாலைகள் மேம்படுத்தப்பட் டன. தற்போது கொரோனா தடுப்பூசிகூட வழங்கப்பட்டுள் ளது. இவற்றை இந்தியா செய் யும்போது நல்லம், அது பற்றி எவரும் கதைப்பதில்லை. ஆனால், தோட்டங்களை இந்திய நிறுவனத்துக்கு வழங் குவதில் மாத்திரம் குறை காண் கின்றனர்.


பெருந்தோட்டங்களை இந் தியாவின் அதானி நிறுவனத் துக்கு வழங்கும் எண்ணம் இல்லை. சீனாவுக்கு வழங்கப்ப டவுள்ளது எனவும் கூறுகின்ற னர். அவ்வாறும் நடைபெறாது. தற்போதைய கம்பனிகளுக்கு தோட்டங்களை நிர்வகிக்கமுடி யாதென்றால், அவற்றை எமது மக்களுக்கே பகிர்ந்தளித்து, அவர்களை சிறுதோட்ட உரி மையாளர்களாக்க வேண்டும் என்பதே காங்கிரஸின் நிலைப் பாடாகும்.

இலங்கையின் உள்விவகா ரங்களை வெளிநாடுகளுக்கு கொண்டுசெல்வது சரியில்லை. பிரச்னைகளை இங்கு பேசி தீர்க்க வேண்டும். ஜெனிவா மாநாடு என்பதெல்லாம் வீண் பிரச்னைகளை உருவாக்கி விடும்- என்றார். (எ)

# கொரோனா தொற்றிலிருந்து மேலும் 811 பேர் குணமடைவு

கொழும்பு,பெப்.23

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 811 பேர் குணமடைந்தனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது. இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 75 ஆயிரத்து 110 ஆக அதி கரித்துள்ளது. (எ)



## செவ்வாயில் தரையிறங்கும் ரோவரின் துல்லியமான ஒளிப்படம் வெளியீடு

நியூயோர்க், பெப். 23

தாங்கள் அனுப்பிய விடாமுயற்சி (perseverance) ஆய்வுகலம் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கும் துல்லியமான படத்தை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

அந்தப் படத்தில், நாசா விண்கலத்திலிருந்து செவ்வாய் கிரக மேற்பரப்பில் ரோவர் பத்திரமாகக் கட்டி இறக்கப்படும் காட்சி தெளிவாக இடம்பெற்றுள்ளது.

ஆய்வுக் கலம் தரையிறக்கப்பட்ட 24 மணி நேரத்தில் அந்தப் படத்தை நாசா வெளியிட்டது. விடாமுயற்சி விண்கலம் தரையிறக்கிய ரோவரில் 25 கமெராக்களும் 2 ஒலிவாங்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

எனவே, இதுவரை இல்லாத அளவுக்கு இந்த ரோவர் தரையிறங்கிய காட்சி மிகத் துல்லியமான ஒளி -ஒலி காட்சிகளுடன் பதிவாகியுள்ளது என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (ஐ)

# இஸ்ரேலில் எண்ணெய் கசிவால் கடல்சார் சுற்றுச்சூழல் பேரழிவு!

- பல ஆண்டுகள் நீடிக்கும் என்று எச்சரிக்கை
- கடல் உயிர்களை காக்க மீட்பர்கள் களத்தில்

ஜெருசலேம், பெப். 23

இஸ்ரேலின் கடற்பரப்பு, கப்பல் ஒன்றால் ஏற்பட்ட எண்ணெய் கசிவால் மிகப்பெரும் கடல் சார் சுற்றுச்சூழல் பேரழிவு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. இந்தப் பேரழிவு இன்னமும் பல ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் கடற்கரைகளை மூடி தூய்மைப்படுத்தும் முயற்சியில் அரசும் இலாப நோக்கற்ற சுற்றுச்சூழல் அமைப்புகளான எக்கோ, ஓசியானை சேர்ந்த 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கடற்கரைகளில் படிந்துள்ள எண்ணெய் படிவுகளை அகற்றி வருகின்றனர்.

இந்த எண்ணெய்க் கசிவுக்கு காரணம் என்ன என்பதை ஐரோப்பிய அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

இதேநேரம் நாட்டின் பிராந்திய நீர்நிலைகளுக்கு அப்பால் ஒரு கப்பலில் இருந்து நூற்றுக்கணக்கான தொன் கச்சா எண்ணெய் கசிய விடப்பட்டது என்று இஸ்ரேல் அதிகாரிகள் கூறுகின்றனர். இது அந்தக் கடற்பரப்பில் சுமார் 50 கிலோமீற்றர் நீளத்துக்கு பரந்துள்ளது என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடற்பரப்பில் ஒரு வாரத்துக்கு முன்னர் புயல் வீசியபோது விபத்துக்குள்ளாகி இந்தக் கப்பலில் இருந்து எண்ணெய் கசியவிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எனினும், இந்தக் கப்பல் குறித்த விபரங்கள் தெளிவாகக் கண்டறியப்படவில்லை.



இதனைக் கண்டறிவதற்காக இஸ்ரேல் அதிகாரிகள், ஐரோப்பிய அதிகாரிகளுடன் இணைந்து அந்தப் பகுதி வழியாகச் சென்ற கப்பல்களின் செயற்கைக்கோள் படங்களை ஆய்வு செய்து வருகின்றனர்.

இதனிடையே, கடலில் படர்ந்துள்ள கச்சா எண்ணெயால் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள மீன்கள், ஆமைகளை மீட்க சுற்றுச்சூழல் தொண்டர்கள் விரைந்துள்ளனர். அவர்கள் எண்ணெய் படிவில் சிறகுகள் தோய்ந்ததால் பறக்க முடியாது தவிக்கும் கடல் பறவைகளையும் காப்பாற்றி வருகின்றனர்.

இதனிடையே, எண்ணெயில் மூழ்கிய, உட்கொண்ட கடல் ஆமைகளுக்கு இஸ்ரேலின் தேசிய கடல் ஆமை மையம் சிகிச்சையளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. (ஐ)



## சவூதி இராணுவத்தில் பெண்கள் இணைப்பு!

றியாத், பெப். 23

சவூதி அரேபிய இராணுவத்தில் பெண்களை இணைக்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமானது.

2019 ஆம் ஆண்டு இறுதியில் சவூதி இராணுவத்தில் பெண்களை சேர்க்க முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், தற்போதே இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சவூதி அரசின் இந்த முடிவை பெண்கள் நல ஆர்வலர்கள் கொண்டாடி வருகின்றனர். அந்நாட்டின் இளவரசர் முஹமது பின் சல்மான் பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை வழங்கி வருகின்றார்.

இவர் பதவியேற்ற பின்னரே, பெண்கள் கார் ஓடவும், ஆண்களின் பாதுகாப்பு இல்லாமல் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவும் அனுமதியளிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 16 தடுப்பூசிகளை மனிதர்களில் செலுத்தி பரிசோதிக்கிறது சீனா!

பீஜிங், பெப். 23

சீனாவில் உருவாக்கப்பட்டுள்ள 16 கொரோனா தடுப்பூசிகளை மனிதர்களுக்கு செலுத்திப் பரிசோதிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு அரசுக்கு சொந்தமான ஜின்ஹூவா செய்தி நிறுவனம் தெரிவிக்கையில்,

புதிதாக 16 கொரோனா தடுப்பூசிகளை தன்னார்வலர்களுக்கு செலுத்தி சோதிக்க, சீன மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்துள்ளது. இவற்றில் ஆறு தடுப்பூசிகள் மூன்றாம் கட்ட சோதனை நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே, சைனோ போர்ம், சைனோ வேக் பயோரெக் ஆகிய நிறுவனங்களின் இரு கொரோனா தடுப்பூசிகளை பொதுமக்களுக்குச் செலுத்துவதற்கு சீனா அனுமதி அளித்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக புள்ளிவிவரப்படி சீனாவில், ஒரு இலட்சத்து 727 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 ஆயிரத்து 833 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)




## 2022 ஆரம்பத்தில் கொரோனா தொற்று முடிவுக்கு வந்துவிடும்!

### உலக சுகாதார அமைப்பு நம்பிக்கை

ஜெனிவா, பெப். 23

கொரோனா தொற்று பரவல் 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முடிவடையும் என்றுதான் நம்புவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஐரோப்பிய பிராந்திய இயக்குநர் ஹான்ஸ் க்ளூக் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் டென்மார்க் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு அவர் அளித்த தகவலின்படி இந்த ஆண்டு முழுவதும் கொரோனா தொற்று பரவல் இருக்கும் என்று கூறியுள்ளார்.

எனினும், மோசமான சூழ்நிலைகள் இப்போது முடிவடைந்து விட்டன என்று கூறிய அவர், 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 இல் தொற்றின் தாக்கம் குறைவாக இருக்கும் என்றார். எவ்வாறாயினும் கொவிட்-19 தொற்றுநோய் தாக்கத்தை யாரும் முன்கூட்டியே அறிய முடியாது என்று அவர் எச்சரித்தார்.

வேகமாக பரவும் வைரஸ் வகைகளின் காரணமாக கொவிட்-19 இற்கு எதிராக உருவாக்கப்பட்ட தடுப்பூசிகளின் செயல்திறனை உலக சுகாதார ஸ்தாபனம் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது என்றும் தேவைப்பட்டால் புதிய பிறழ்வுகளின் அடிப்படையில் தடுப்பூசிகளை மாற்ற முடியும் என்றும் ஹான்ஸ் க்ளூக் குறிப்பிட்டார். (ஐ)

## நவால்னிக்கு வேறொரு வழக்கிலும் தண்டனை

மொஸ்கோ, பெப். 23

பிணை விதிகளை மீறிய வழக்கில் சிறை தண்டனை அனுபவித்து வரும் ரஷ்யாவின் எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவால்னி மற்றொரு வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி விளாடிமிர் புடின் அரசுக்கு ஆதரவு வழங்கும் 94 வயதான முன்னாள் இராணுவ அதிகாரியை நவால்னி 'ஊழல்வாதி' என்று விமர்சித்தார். இது தொடர்பான வழக்கிலேயே அவரைக் குற்றவாளியாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.



இதையடுத்து அவருக்கு, 8.5 இலட்சம் ரூபிள்கள் - நம் நாட்டு மதிப்பில் 20 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகி ஜேர்மனில் சிகிச்சை பெற்றமையால் உயிர் பிழைத்த நவால்னி கடந்த மாதம் ரஷ்யா திரும்பியிருந்தார். அவர் பிணை விதிகளை மீறினார் என்ற குற்றச்சாட்டில் கைதாகியிருந்தார். இதையடுத்து அவருக்கு 32 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# லஹிரு குமாரவுக்கும் கொரோனா தொற்று

கொழும்பு, பெப். 23

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் லஹிரு குமார கொரோனா தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கொரோனா தொற்றுக்குள்ளான இலங்கை அணியின் இரண்டாவது வீரர் இவர் ஆவர்.

இலங்கை அணி, மேற்கிந்தியத்தீவுகளுடனான சுற்றுப் பயணத்துக்கான ஆயத்தங்கள் இறுதித் தறுவாயில் உள்ளது. இந்நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

முன்னதாக லஹிரு திரிமன்ன கொரோனா தொற்றுக்குள்ளாகி வெற்றிகரமாக அதிலிருந்து மீண்டு வந்தார். இந் நிலையில் தற்சமயம் லஹிரு குமார கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

அவருக்கு பதிலாக வேகப் பந்து வீச்சாளர் சுரங்க லக்மாலை அணியில் உள்வாங்குவதற்கும் வாயப்புகள் உள்ளன. (ஐ)

## ஆஸியுடனான இருபது-20:

# கொன்வே அதிரடி: நியூஸிலாந்து வெற்றி

கிறிஸ்ட்சூரிச், பெப். 23

டெவோன் கொன்வேயின் அதிரடியான துடுப்பாட்டத்தால் அவுஸ்திரேலிய அணியை 53 ஓட்டங்களால் வெற்றி கொண்டது நியூஸிலாந்து அணி.

நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடுகிறது.

இதன் முதல் போட்டி நேற்று கிறிஸ்ட்சூரிச்சில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடியது நியூஸிலாந்து அணி. மார்ட்டின் குப்தில், ரிம் செய்பேர்ட் இணை தொடக்கம் கொடுத்தனர்.

அவுஸ்திரேலியாவின் ஆரம்ப பந்து வீச்சாளரான அகர் வீசிய மூன்றாவது பந்திலேயே ஓட்டம் எதையும் பெறாமலே வீழ்ந்தார் குப்தில். அவரைத் தொடர்ந்து அந்த அணியின் நம்பிக்கை வீரரும் அணித் தலைவருமான கேன் வில்லியம்ஸன் நுழைந்தார்.

ஆனால், மறுமுனையில் ரிம் செய்பேர்ட் ஒரு ஓட்டத்துடன் றிச்சர்ட்சனின் யோர்கர் பந்தில் விக்கெட்டைப் பறி கொடுத்தார். வில்லியம்ஸனும் அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அவர் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஆனால், நான்காவது விக்கெட்டுக்காக களத்தில் சந்தித்த கொன்வே, கிளன் பிலிப்ஸ் இணை அபாரமாக ஆடியது. கொன்வே அதிரடியாக பௌண்ட்ரிகளை விளாசினார். 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்கள் என்று தடுமாறிய நியூஸிலாந்துக்கு அவரின் துடுப்பாட்டம் பெரும்



பலமாக மாறியது.மறுமுனையில் அவருக்கு துணையாக பிலிப்ஸ் நின்றார். எனினும் அவர் 20 பந்துகளில் 30 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த நீசம் 26 ஓட்டங்களைப் பெற்று றிச்சர்சனின் பந்தில் மார்ஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

ஆனால், 10 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களை விளாசிய கொன்வே 59 பந்துகளில் 99 ஓட்டங்களைக் குவித்தார்.ஓர் ஓட்டத்தால் சதமடிக்கும் வாய்ப்பை அவர் இழந்தாலும் ஆட்டமிழக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இது அவரின் 3ஆவது அரைச்சதமாகும். மிற்செல் சான்ட்னரும் ஆட்டமிழக்காமல் 7 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் நியூஸிலாந்து அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 184 ஓட்டங்களை எடுத்தது.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில், டேனியல் சாம்ஸ், கேன் றிச்சர்ட்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் அகர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது இனிங்ஸில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு நியூஸிலாந்து பந்து வீச்சாளர்கள் கடும் அச்சுறுத்தலாக இருந்தனர். இதனால், அந்த அணியின் வீரர்களில் மிற்செல் மார்ஸ் மட்டும் 45 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே அந்த அணியின் வீரர் பெற்ற அதிகூடிய ஓட்டமாகும். அகர் 23, மத்தியூ வேட் 12, ஜெய் றிச்சர்ட்ஸன் 11 ஓட்டங்களை பெற்றனர்.

ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க ஓட்டத்தை எட்டவேயில்லை.

இதனால், அந்த அணி 17.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

நியூஸிலாந்தின் பந்து வீச்சில் இஸ் சோதி 4 விக்கெட்களையும், ரிம் சௌதி, ட்ரென்ட் போல்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக டெவோன்கொன்வே தெரிவானார்.



## அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ்:

# ஜொகோவிச் சம்பியன்

மெல்பர்ன், பெப். 23

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் சம்பியனை 9ஆவது முறையாக கைப்பற்றியுள்ளார் சேர்பிய வீரர் நோவக் ஜொகோவிச். இது அவரது 18ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மெல்பர்னில் நேற்று முன்தினம் நடந்த ஆண்களுக்கான இறுதியாட்டத்தில், தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்யாவின் டெனில் மெத்தேவை எதிர் கொண்டார் முதல்நிலை வீரரான ஜொகோவிச்.

முதல் செற் இருவருக்கும் பெரும் போராட்டமாக அமைந்தது. 45 நிமிடங்கள் இந்த செற் நீடித்தது. இறுதியில் அதனை, 7-5 என்ற கணக்கில் வெற்றி கொண்டார் மெத்தேவ்.

ஆனால், சுதாகரித்துக் கொண்ட ஜொகோவிச் அடுத்த செற்களை எதிர்கொண்டார். இவற்றை, 6-2, 6-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இது அவர் தொடர்ச்சியாக 3ஆவது முறையாக கைப்பற்றும் அவுஸ்திரேலிய ஓப்பன் சம்பியனாகும். இதனுடன் அவர் 9 முறை பட்டம் வென்றுள்ளார். அத்துடன் இவர் பெறும் 18ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 15 கோடி ரூபா எத்தனை டொலர் என்று தெரியாது

வெலிங்டன், பெப். 23



ஐ.பி.எல். ஏலத்தில் 15 கோடி இந்திய ரூபாவுக்கு என்னை ஏலம் எடுக்கப்பட்டதை கேள்விப்பட்டதும், நள்ளிரவில் எழுந்து உட்கார்ந்தேன் என்று கெய்ல் ஜேமிசன் கூறியுள்ளார்.

15 கோடி இந்திய ரூபாவுக்கு நியூஸிலாந்து டொலரில் எவ்வளவு என்று எனக்கு அப்போது கணக்குத் தெரியவில்லை என்று அப்போது அவர் உற்சாகமாகத் தெரிவித்தார்.

அண்மையில் நடந்த ஐ.பி.எல். ஏலத்தில் பெங்களூர் அணியால் ரூ.15 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டவர் நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரும் சகலதுறை வீரருமான கெய்ல் ஜேமிஸன். 6.8 அடி உயரமுள்ள ஜேமிசன் 10இற்கும் குறைவான டெஸ்ட் போட்டிகளில் விளையாடினாலும் அவரின் பந்துவீச்சும், அதிரடியான ஆட்டமும் ஐ.பி.எல். லீக்கிற்குள் இழுத்து வந்துள்ளது.

இம்முறை ஏலத்தில், வேகப்பந்து வீச்சாளர், சகலதுறை வீரர்களை அணியில் எடுக்க ஒவ்வொரு அணிகளும் பெரும் ஆர்வம் காட்டின என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒருநாள், ரி-20 அணிக்கு இனி அஸ்வினால் திரும்ப முடியாது

## சுனில் கவாஸ்கர்

புதுடில்லி, பெப். 23



இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் அசத்தி வரும் சகலதுறை வீரர் ரவிச்சந்திரன் அஸ்வினுக்கு இனி இந்திய வெள்ளைப்பந்து அணியில் மீண்டும் இடம் கிடைக்க வாய்ப்பில்லை. அதற்கு அவர் சரிவரபமாட்டார் எனவும் தெரிவித்துள்ளார் முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர்.

அஸ்வின் குறித்து கவாஸ்கர் கூறுகையில் “எனக்கு தெரிந்து அஸ்வின் இந்திய கிரிக்கெட்டின் ஒருநாள், இருபது - 20 கிரிக்கெட் அணிக்கு திரும்ப வாய்ப்பில்லை. ஏழாவது துடுப்பாட்ட வரிசையில் சகலதுறை வீரர் ஹர்திக் பாண்ட்யா அந்த இடத்தை இந்த இரண்டு வடிவிலான கிரிக்கெட்டிலும் நிரப்பிவிட்டார். ஜடேஜாவும் அணியில் இருக்கிறார்.

அதனால் அவர் அணிக்கு சரிபடமாட்டார். ஆனால், எப்படியும் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு அசைக்க முடியாத வீரராக டெஸ்ட் கிரிக்கெட்டில் அஸ்வின் ஜொலிப்பார்” என்றார். (ஐ)

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவை எல்லைக்குள் செயல்பட வேண்டும்

## அமைச்சர் பீரிஸ் திட்டவட்டம்



கொழும்பு,பெப்.23

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இதுவரை நாங்கள் எடுத்துள்ள நிலைப்பாட்டை எடுத்துரைப்போம். எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் அறிவிப்போம். அவை அனைத்தையும் இந்நாட்டு அரசமைப்புக்கு அமையவே மேற்கொள்வோம். மனித உரிமைகள் பேரவை, தனது கடமை எல்லைக்குள் செயல்பட வேண்டும். இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட யாருக்கும் உரிமையில்லை என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு, பத்தரமுல்ல, வோட்டர் எட்ஜ் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கடந்த அரசாங்கம் வழங்கிய சில வாக்குறுதிகளானவை எமது அரசமைப்புக்கு முற்றிலும் முரணானவை என்பதால் அப்போதைய மற்றும் தற்போதைய அரசாங்கத்தால்கூட அவற்றைச் செய்யமுடியாது. அதேபோன்று மனித உரிமைகள் பேரவை, தனது கடமை எல்லைக்குள் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். நாட்டின் உள்விவகாரத்துக்குள் தலையிட உரிமையில்லை.

20ஆவது திருத்தம் என்பது இந்நாட்டு மக்களுக்குரியது. முப்படையினரின் பதவிகள் நியமனம் என்பன நாட்டு அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சிறந்த உதாரணமாகும். அதற்கான பொறுப்பை யார் ஏற்பார்? வெளிநாட்டுப் பிரிவுகள் ஏற்குமா? இல்லை. அதனால் மனித உரிமைகள் பேரவை அரசாங்கத்துக்கு மதிப்பளிக்க வேண்டும்.

அதேபோன்று ஒரு நாட்டை இலக்கு வைத்து எடுக்கப்படுகின்ற தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கின்றோம். அன்று இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவந்தார்கள். நாளை எந்த நாட்டுக்கோ எனத் தெரியாது. அனைத்து நாடுகளையும் ஒரே அளவுகோலில் தான் அவர்கள் அளவிட வேண்டும். நாட்டின் அரசாங்கம் தொடர்பில் எதிர் நிலைப்பாடா? அல்லது சிறந்த நிலைப்பாடா? என்பது முக்கியமல்ல. அனைத்து நாடுகளுக்கும் ஒரேவிதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை செயல்பட வேண்டும்.

குறிப்பாக அரசியல் பழிவாங்கல் பற்றிய ஆணைக்குழு அமைக்கப்படுவதற்கு முன் அதனை விமர்சிப்பது என்பது பக்கச்சார்பான விடயமாகும். வெளிநாடுகளில் செயல்படுகின்ற புலம்பெயர் சக்திகள் மற்றும் அவர்களுக்கு சார்பான சக்திகள் எமக்கெதிராக கொண்டுவருகின்ற யோசனைகளை நாங்கள் எதிர்க்கின்றோம். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் இந்தச் செயல்பாட்டை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவிக்கின்றோம்.

கேள்வி: - ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவின் உதவியை இலங்கை நாடியுள்ளது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:- இந்தியா - இலங்கைக்கு இடையில் பல்லாண்டு நட்புறவு உள்ளது. எமக்கெதிரான நிலைப்பாட்டை இந்தியா எடுக்காது என்று நம்புகின்றோம். சிலர் இதனை வேறுவிதமாக நாட்டுக்கு எதிரான வகையில் சிந்திப்பார்கள் என்றால், அதில் பயனில்லை. இந்திய அரசாங்கம் எம்முடன் மிகவும் நட்புறவை வலுப்படுத்தி செயல்படுகின்றது. வெளிநாடு ஒன்றுடன் கொடுக்கல் வாங்கல் செய்கின்றபோது சில நெருக்கடி நிலை ஏற்படலாம். ஆனால், அந்நாட்டுடன் உறவு முறிந்தது என்ற முடிவுக்கு வரக்கூடாது.

கொழும்பு துறைமுக கிழக்கு முனைய விவகாரத்தில் இந்தியாவுடன் பேச்சு நடத்தினோம். மேற்கு முனையம் குறித்தும் பேச்சு நடத்தினோம். ஆகவே, எமது நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற எந்த தீர்மானத்தையும் இந்தியா எடுக்காது என நம்புகின்றோம். கடந்த சில நாள்களாக ஆளுங்கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து ஜெனிவா விவகாரம் தொடர்பில் கலந்துரையாடினோம். இரண்டு வாரங்களில் மூன்று சந்திப்புக்களை நடத்தினோம். கட்சிகளுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் குறித்தும் பேச்சு நடத்தப்பட்டது- என்றார். (எ)






# ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடும் தேசிய சாரணர் நிகழ்ச்சித் திட்டம்

## ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

கொழும்பு,பெப்.23

ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடும் தேசிய சாரணர் நிகழ்ச்சித்திட்டம் நேற்று முற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலைமையில் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஆரம்பமானது.

சர்வதேச சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபுவின் 164 ஆவது பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் சிவப்பு சந்தன மரக்கன்று ஒன்று நடப்பட்ட பின்னர் கையடக்க தொலைபேசி மூலம் அது பதிவு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் படி நாடளாவிய ரீதியில் உள்ள 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாரணர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் இரண்டு மரக்கன்றுகளை நட்டு அவற்றைப் பராமரித்துக்கொள்வார்கள்.

'துரு' கையடக்க தொலைபேசி செயலியின் மூலம் இந்நிகழ்ச்சித்திட்டம் மதிப்பீடு செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில் இலங்கை சாரணர் இயக்க அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (எ)

# 9 மணிநேரத்தில் 1,165 பேர் கைது

கொழும்பு,பெப்.23

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட 9 மணிநேர விஷேட பொலிஸ் நடவடிக்கையின்போது 1,165 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 771 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 317 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் கூறினர். (எ)

# இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் வகையில் புதிய அரசமைப்பு அமைதல் வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் ஆலோசனை

கொழும்பு,பெப்.23

இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்னைக்கு உகந்த தீர்வைக் காண்பதற்கு வாய்ப்பாக, முன்னர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கையின் விதந்துரைகளை முன்னிலைப்படுத்தி புதிய அரசமைப்பு விவகாரத்தை கையாள்வது சாலப் பொருத்தமானது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய அரசமைப்புக்கான உத்தேச வரைபை தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட ஒன்பது பேர் கொண்ட நிபுணர் குழு, புதிய அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமாக கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அழைத்திருந்தது. இந்தச் சந்திப்பு கடந்த சனிக்கிழமை கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மற்றும் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது நிபுணர்கள் குழு, புதிய அரசமைப்பு தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு பற்றிக் கேட்டறிந்தது.

இலங்கையின் இனப்பிரச்னைக்கான தீர்வு எட்டப்படுவதோடு சகல இன மக்களினதும் அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையில் அதிகாரங்கள் பகிரிந்தளிக்கப்படுதல், நீதித்துறையின் சுயாதீனம் பேணப்படுதலின் அவசியம், நீதி, நிர்வாகத் துறையில் தேவையற்ற தலையீடுகள் இல்லாமல் செயல்படுதல், அனைத்து இனங்களும் சமத்துவமாக மதிக்கப்படுதல், பாதுகாப்பை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் அனைத்தும் அரசமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அந்தக்குழுவில் தமிழ்க் தேசியக் கூட்டமைப்பு மட்டும் பங்கேற்றிருக்கவில்லை. ஆனால்,ஏனைய அனைத்துத் தரப்புக்களும் பங்குபற்றின.

பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை அடுத்து சர்வகட்சி குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதில் நாட்டின் தன்மை ஒற்றையாட்சி என்றோ அல்லது வேறு வடிவத்திலோ இருக்கவில்லை. அதிகாரங்கள் பகிரப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் அதற்கான முறைமைகள் தொடர்பில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை முழுமையாக நடைமுறைப் படுத்தப் படுகின்றபோது எமது மக்களின் அபிலாஷைகள் பூர்த்தியாகும் என்றே கருதுகின்றோம். அத்துடன் அந்த அறிக்கையில் ஒற்றையாட்சி, கூட்டாட்சி என்ற சர்ச்சைக்குரிய சொற் பிரயோகங்கள் பயன்படுத்தப்படாமல் அதிகாரங்கள் பகிரப்படுவதற்கான பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, குறித்த அறிக்கையை பின்பற்றும் அதேவேளையில், அதற்குப் பின்னரான காலத்தில் மைத்திரி-ரணில் கூட்டு அரசாங்கத்தில் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை முன்மொழிவுகள் உட்பட் அனைத்து விடயங்களும் புதிய அரசமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என்பதே முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டின் கடன் தொடர்பில் அரசு மக்களுக்கு பொய் கூறிவருகின்றது!

## ஹர்ஷ டி சில்வா எம்.பி.



கொழும்பு,பெப்.23

**அரசாங்கம் சுமார் 600 கோடி டொலர் வெளிநாட்டு கடனை மீள செலுத்த வேண்டியுள்ளது. எனினும், கடனை மீள செலுத்துவதில் எந்தப் பிரச்னையும் இல்லை என்று கூறிக் கொண்டு அரசாங்கம் மக்களை ஏமாற்றுகிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

600 கோடி டொலர் வெளிநாட்டு கடனை அரசு செலுத்த வேண்டியுள்ளது. ஆனால், இதைச் செலுத்துவதில் சிக்கல் இல்லை என்று கூறுகின்றனர். அவ்வாறு சொல்வது பொருத்தமற்றது. இந்தக் கடனை செலுத்துவதற்கான போதிய அளவு நிதி இருக்கிறது என்றும் கூறப்படுகின்றது.

ஆனால், கடந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது மத்திய வங்கியில் 560 கோடி டொலர் மாத்திரமே காணப்பட்டது. அதேபோன்று ஜனவரி 31 ஆம் திகதியாகும் போது 480 கோடி டொலர் மாத்திரமே இருந்தது.

இதற்கமைய ஜனவரி மாதத்தில் மாத்திரம் 90 கோடி டொலர் செலவிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி 40 கோடி டொலரை இந்தியாவுக்கு செலுத்த வேண்டியிருந்தது. செலவுகள் அனைத்து போக அரசாங்கத்திடம் 100 கோடி டொலர் மாத்திரமே எஞ்சியுள்ளது.

தங்கம் 40 கோடி டொலர் பெறுமதியானவை மாத்திரமே உள்ளது. இவ்வாறான நிலையில், அரசாங்கம் 600 கோடி டொலரை செலுத்த வேண்டியுள்ளது. அரசாங்கம் தவிர, தனியார் துறையினரும் 150 கோடி டொலர் கடன் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, கடனை மீள செலுத்துவதில் பிரச்னை இல்லை என்று பொய் கூறுவது பொருத்தமற்றது.

இந்தியாவிலிருந்து 100 கோடி டொலர் முதலீடு கிடைக்கும் என்று கூறுகிறார்கள். அவர்களிடம் பெற்றுக் கொண்ட 40 கோடி டொலரையே அரசாங்கத்தால் பாதுகாக்க முடியாமல் போயுள்ள நிலையில் எவ்வாறு முதலீட்டை பெற்றுக் கொள்ள முடியும் ? இவ்வாறு பொய் கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்காமல் பொறுப்புடன் செயல்படுமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றோம்.

இதே நிலைமை தொடருமானால் அடுத்த ஓரிரு மாதங்களில் வாழ்வதற்கான டொலர்களும் கையை விட்டு நீங்கி விடும். இதனால் 210 இலட்சம் மக்களே பாதிக்கப்படுவர். காரணம் அரசாங்கத்திடம் எந்தவொரு திட்டமிடலும் இல்லை - என்றார். (ஐ)

# வெலே சுதாவை நீதிமன்றில் முற்படுத்த நேற்று உத்தரவு!

கொழும்பு, பெப். 23

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'வெலே சுதா' எனப்படும் கம்பளை விதானகே சமந்த குமாரவை எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்திய பட்டபெதிகே நேற்று சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தமது சேவை பெறுநர் பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஹெரோயின் வர்த்தகத்தின் மூலம் ஈட்டிய 17 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துகளுக்கு உரிமை கோரியமையினூடாக நிதி தூய்தாக்கல் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரினால் வெலே சுதா, அவரின் மனைவி மற்றும் உறவினரான பெண் ஒருவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

வழக்கின் மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஐ)

# ரயில் பயணிகள் கவனத்திற்கு...!

கொழும்பு, பெப். 23

கட்டுநாயக்கா - புத்தளம் இடையிலான ரயில் சேவை இரு நாட்களுக்கு இடைநிறுத்தப்படவுள்ளதாக புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் 28 ஆம் திகதி இரவு 8.30 மணி வரை இந்த மார்க்கத்தில் ரயில் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளன.

புத்தளம் ரயில் மார்க்கத்தின் குரண மற்றும் நீர்கொழும்பிற்கு இடைப்பட்ட பகுதியில் திருத்தப் பணிகள் இடம்பெறுவதாலேயே இந்த சேவை நிறுத்தப்படவுள்ளது.

குறித்த காலப்பகுதியில் புத்தளம் ரயில் மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து கொழும்பு - கோட்டை மற்றும் கட்டுநாயக்கா வரை மட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)





யாழ். மகளிர் முன்னணி இணைப்பாளர் திருமதி தங்கத்துரை தயானி அவர்களால் பழைய மாணவர் மு.பாலேந்திராவின் முயற்சியில் யா/ஏழாலை மகாவித்தியாலய மாணவர்களுக்கு ரூ. 15 ஆயிரம் பெறுமதியான பயிற்சிப் புத்தகங்கள் பாடசாலை அதிபர் ஆர்.புஸ்பரட்ணத்தினம் மூலம் நேற்று மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டபோது....

# தண்ணீர் ஏற்றுமதிக்கு அரசாங்கம் தயார்

## வர்த்தக அமைச்சர்




கொழும்பு, பெப்.23

இலங்கை நீரை வெளிநாட்டுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான விடையத்தில் அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நீர் ஏற்றுமதி செய்வதன் ஊடக நாட்டுக்கு அந்நிய செலாவணியை அதிகம் பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சர் கூறியுள்ளார்.

தற்போது ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகள் உலகச் சந்தைக்கு நீர் விநியோகிப்பதோடு அதன் ஊடாக அதிக வருமானத்தை ஈட்டிக்கொண்டிருக்கின்றது என்றார்.

ஹந்தானையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (ஐ)

# வீதியில் போராட்டம் நடத்தும் நிலையில் பேராயரும் மக்களும்!

## சுதந்த தேரர் அரசுக்கு கண்டனம்



கொழும்பு, பெப். 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை உள்ள பரிந்துரை தொடர்பிலான விடயங்களுக்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் கத்தோலிக்க மக்களுடன் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுதந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை உள்ள பரிந்துரை தொடர்பிலான விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் கத்தோலிக்க மக்களுடன் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாம் முஸ்லிம் இனவாதம் தளிர் விடும்போதே உரிய இடங்களை அறிவித்திருந்தோம். ஆனால், யாரும் அதனைக் கேட்கவில்லை, இஸ்லாமிய அடிப்படை வாதத்தை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தியிருந்தால் ஈஸ்டர் தாக்குதல் போன்ற ஒரு சம்பவம் இடம்பெற்றிருக்காது.

இதன் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது தொடர்பில் நாம் ஆரம்பத்திலேயே கூறியிருந்தோம். அதனையும் யாரும் கணக்கில் கொள்ளவில்லை. இப்படியான ஒரு சூழ் நிலையில் அரச சார்பற்ற அமைப்புகளும், வெளிநாட்டில் உள்ள இஸ்லாமிய அமைப்புகளும் இந்த விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது பல தடங்கல்களை ஏற்படுத்தின. அதை நாம் ஒரு குற்றச்சாட்டாக இப்போது முன்வைக்கின்றோம்.

இப்போதுள்ள புதிய நிலைமைதான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்ட, முறைப்பாடுகளைப் பதிவுசெய்த தேசிய அமைப்புகளுக்கு எதிராக குற்றங்கள் சுமத்தப்படும் ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். (ஐ)

# '20' இல்லாவிட்டால் ஜெனிவாவில் நெருக்கடியை குறைத்திருக்கலாம்

## கரு ஜெயசூரிய சுட்டிக்காட்டு



கொழும்பு,பெப்.23

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படாமல் இருந்திருந்தால், இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு இன்னும் சிறப்பாக முகங்கொடுத்திருக்க முடியும் என்பதோடு நெருக்கடியையும் குறைத்திருக்கலாம் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில்:

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் மூலம் வழங்கப்பட்ட மிகச்செறிவான அதிகாரங்கள், அரசியல் ரீதியில் பெரும் பிளவொன்றைத் தோற்றுவித்திருப்பதுடன், ஜனநாயகக் கட்டமைப்பையும் வலுவிழக்கச்செய்திருக்கின்றது.

இந்நிலையில், அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படாமல் இருந்திருந்தால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரை இன்னும் சிறப்பாக எதிர்கொள்ளக் கூடிய நிலையில் இலங்கை அரசாங்கம் இருந்திருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக்கு எதிரான பிரேரணை: பிரித்தானியா மீது ரெலோ விசனம்!

லண்டன், பெப். 24

**மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடரில் பிரித்தானியா தலைமையில் இலங்கை மீது கொண்டு வரப்படவுள்ள பிரேரணையின் மாதிரி வடிவம் வெளியிடப்பட்டது. இந்தப் பிரேரணையை பிரித்தானியாவின் தலைமையில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெறுகிறது. இந்நிலையில், இந்தப் பிரேரணை தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நீதியைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக காத்திரமாக அமையவில்லை என்று ரெலோ கட்சி கடும் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளது.**

இது தொடர்பில், அந்தக் கட்சி பிரித்தானியாவின் வெளிநாட்டு அலுவல்கள் காரியாலயத்திற்கு தனது இங்கிலாந்து கிளையின் ஊடாக நேற்றுமுன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில், "தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட மாதிரி பிரேரணை கிடைத்தது. உங்கள் முயற்சிக்கும் அங்கத்துவ நாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கிறோம். பிரேரணையில் நீங்கள் கொண்டு வந்திருக்கும் பிபி 7 ஓபி 6 சரத்துக்களை பாராட்டும் அதேவேளையில் மனித உரிமைகள் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 12-01-2021 திகதியிடப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும், இங்கு இணைக்கப்பட்டுள்ள நாம் அங்கம் வகிக்கும் தமிழ் தேசிய கட்சிகளின் ஒருமித்து கைச்சாத்திடப்பட்டு தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையிலும், ஆக்கபூர்வமானதும் முடிவானதுமான சரத்துக்களை உள்ளடக்குவதில் தங்கள் கவனத்தை செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

2009இல் நடந்துமுடிந்த யுத்தத்தில் எமது மக்கள் முகம் கொடுத்த சர்வதேச ரீதியாக அட்டூழிய குற்றங்கள் என்று கருதப்படும் இனப்படு கொலை உட்பட யுத்தக்குற்றங்கள் மற்றும் மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றிற்கு எமது இனத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைகளை கோரி நாம் தொடர்ந்தும் போராடி வருகிறோம் என்பதை நன்கு அறிவீர்கள்.

பொறுப்புக்கூறலும் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்கான சர்வதேச பொறிமுறை அதாவது சர்வதேச குற்றவியல் நீதிமன்றமோ அதற்கொப்பான பொறிமுறை அல்லது விசேட தீர்ப்பாயத்திற்கு பாரப்படுத்துதல்

சுயாதீனமான சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டு மேற்படி நீதி வழங்கலுக்கு உதவியாக ஆதாரங்கள் திரட்டப்படல். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகப் பிரதிநிதிகள் இலங்கையில் அமர்த்தப்பட்டு இலங்கையில் நடக்கும் மனித உரிமைகள் மீறல் பற்றிய விடயங்கள் அறிக்கையிடப்படல்.

எமது மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கும் வகையிலான நமது சுயநிர்ணய உரிமையைமையையும் வடக்கு கிழக்கு பூர்வீக தாயகத்தையும் அங்கீகரிக்கும் நீண்டகால கோரிக்கையான அரசியல் தீர்வினை சர்வதேச மத்தியஸ்தத்தோடு நிறைவேற்றுதல் என்பனவாகும். மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் பெரும் நம்பிக்கையோடு இருந்த எமக்கு இந்த மாதிரி வரைவு வலிமையிழந்த நிலையிலே இருப்பதையும் அறிக் கையில் இடப்பட்ட விடயங்களிலிருந்து அதிக தூரம் விலகி செல்வதோடு கடந்தகால பிரேரணைகளான 30/1, 34/1, 40/1 ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்ட பல விடயங்கள் தவிர்க்கப்பட்டு இருப்பதையும் அவதானிக்கிறோம்.

எங்களுடைய நீதிக்கான கோரிக்கைகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளமையையும் மனித உரிமைகள் ஆணையம் மற்றும் உறுப்புரிமை நாடுகளின் மீதான எம்மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை இழக்கச் செய்வதாக இருப்பதையும் உணர்வதால், சமர்ப்பிக்கப்பட இருக்கின்ற பிரேரணையை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் முகமாக அமைய வேண்டுமே தவிர குற்றவாளிகளை தப்பிக்க இடமளிப்பதாக இருக்கக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கியதாக திருத்தி அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# சி.சி.ரீ.வி. கமெராவால் சிக்கினர் திருடர்கள்

வடமராட்சி, பெப். 23

வடமராட்சியில் ஆட்கள் இல்லாத வீட்டுக்குள் புகுந்து மோட்டர் திருட முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வீட்டில் இருந்த சி.சி.ரீ.வி. கமெரா மூலம் கண்காணித்த வீட்டின் உரிமையாளர் துரிதமாக செயல்பட்டமையாலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை வடம ராட்சி - கரணவாய் கிழக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது:

வீட்டிலுள்ளவர்கள் தற்காலிகமாக வெளிமாவட்டத்தில் தங்கியிருக்கும் நிலையில், அந்த வீட்டின் மதிலால் பாய்ந்து சென்ற இருவர் நீரிறைக்கும் மோட்டரை திருட முற்பட்டுள்ளனர்

வீட்டில் பொருத்தப்பட்ட சி.சி.ரீ.வி. கமெராவில் அவதானித்த வீட்டின் உரிமையாளர், வீட்டை பராமரிப்பவருக்கு தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

விரைந்து செயல்பட்ட அவர் அப்பகுதியில் இளைஞர்கள் சிலருடன் சென்று மோட்டரை திருட முற்பட்டவர்களை மடக்கிப் பிடித்துள்ளார். அத்துடன் அவர்களை நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் இருவரும் பருத் தித்துறை நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் முற்படுத் தப்பட்டு, தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஐ)

# சுகாஷிடமும் வாக்குமூலம்!

யாழ்ப்பாணம், பெப். 23

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் ஊடகப் பேச்சாளருமான க.சுகாஷிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்துக்கு சென்ற பருத்தித்துறை பொலிஸார், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்துகொண்டமை தொடர்பில் அவரிடம் வாக்குமூலத்தை பெற்றுள்ளனர்.

இதேவேளை, பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த பலரிடமும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்



## அமரர்
## சிவராசா திலீபன்

முருகேசர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவராசா திலீபன் 22.02.2021 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவராசா தேவராணியின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராஜேந்திரம் (ஆனந்தம்) மற்றும் இராஜகுமாரியின் அன்பு மருமகனும் சுபாசினியின் அன்புக் கணவரும் தனுசன், தீபிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அமரர் சிவதேவதாசன், கிரிதாஸ் (பிரஹா ஜெட் லைன் உரிமையாளர்) சதீஸ் (மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வினோதினி, ஜெனார்த்தனி, ரஜனி, ரஜிதா, சகிலா, சுஜாதா, மேனுகா, கிருஷ்ணா ஆகியோரின் அன்பு மைத்துணரும் செல்வராஜா, தியாகரட்ணம், திவாகரன், கவிராஜ், திலீபன் ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.02.2021 (புதன்கிழமை) முருகேசர் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 09.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல 15/2 முருகேசர் லேன்,
நல்லூர்.
தொ.இல : 0777222524

தகவல்
குடும்பத்தினர்

# 13ஐ நடைமுறைப்படுத்துவதே அர்த்தமுள்ள அதிகார பகிர்வு!

## நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது இந்தியா

கொழும்பு, பெப். 23

13ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அர்த்தமுள்ள அதிகார பகிர்வு குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை பிரதி உயர்ஸ்தானிகர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் இலங்கைக்கான பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் ஆகியோர் நேற்று சந்தித்துப் பேசினர்.

இதன் போது " வடக்கு , கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு விசேடமாக 13 ஆவது அரசமைப்பு திருத் தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அர்த்தமுள்ள அதிகார பகிர்வு குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை பிரதி உயர்ஸ்தானிகர் வலியுறுத்தினார் என்று இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது. (ஐ)

விசேட விலையில் மடிக்கணனி

Laptop
14GB Ram
1 TB HDD
Windows 10
HP i3
Free Bag
கையிருப்பு உள்ளவரை
St.Antonys Computer
189, K.K.S Road, Jaffna Town, Jaffna.
021 222 4865 / 075 069 8608

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை நகைசுவை நிகழ்ச்சி
இவ்வாரம் நடிகர் T.ராஜேந்திரன்



**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : டேக் இட் ஈஸி
6.00 மணி : ட்றெய்லர் டைம் - திரைப்படங்களின் முன்னோட்டக் காணொளிகள்
6.30 மணி : மூவி டோக்கீஸ் - ஆங்கில திரைப்படங்களின் விமர்சனம்



**இரவு**
7.00 மணி : கதை நேரம் - நகைசுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை
10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**கல்வி TV CHANNEL-1**

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.30 மணி : சைவசமயம்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் மல்லாகம் முதலி அம்பாள் ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழா

**CHANNEL HOLY MARY**

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்தூர்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்